# விவிலிய வினாடி வினா

## சரியான விடைகளை எழுதியவர்கள்

**அருட்சகோதரிகள்**

எதெல்பெர்காமேரி OSM, ஜோஸ்பிட்டா மேரி OSM, ரெஜினா மேரி FIHM, பொலன்ஷியா OSM – திருச்சி; ஸ்டெல்லா ரோஸ் CIC, மிரியம் CIC, மேரி செசாரியா, ஐசிந்தா SJC, லூர்து மேரி CIC – சென்னை; சின்னராணி SJC - அணிலாடி; டொனட்டெல்லா அனஸ்தாசியாள் FIHM, அல்போன்ஸ் FIHM, அருள்மேரி FIHM, அனன்சியா மேரி FIHM, ஆக்னஸ் FIHM, ஜார்லத் புஷ்பா FIHM, பிலோமினாள் FIHM, டொன்போஸ்கோ மேரி FIHM, லூக்காஸ் மேரி FIHM, டோம்னா மேரி FIHM – கும்பகோணம்; லில்லி இஸபெல்லா மேரி OSM – மதுரை; சகாயம் SJC, சிரில் SJC - கடலூர்; அருள் சீலி SSAM – நாகர்கோவில்; , சிரோன் OSM, ரூபெல்லா மேரி OSM – நெல்லை; புஷ்பம் FSAG லோரா மேரி OSM – புன்னைக்காயல்; சலேத்மேரி FSAG – தாராபுரம்; புஷ்பா மேரி செலின், எமெரன்ஸ் மேரி, ஆக்னஸ் ரோசல் மேரி, ரூபி மேரி OSM – தோகைமலை. லவுரா -ஈரோடு, ஜூ லி எலிசபெத் தஞ்சாவூர்

**பொதுநிலையினர்**

ஆன்டனிக்கா ஸெர்லி, பிரான்சிஸ் பேசில், பாத்திமா, சந்தனம், ஜான் ஜோசப், செலின் மேரி, மேரி மார்கரேட், ஆனி பீட்டர் ராஜ், லீமா தெரஸ், அனிருத் ஜோஸ்வா, இமாக்குலேட் சோபியா – திருச்சி; லீலாவதி, மார்கரேட் பெல்சியா, அமல செல்வி, அல்போன்சா ஜோதி மேரி, மரிய பிரகாசம் – திண்டுக்கல்; வியாகுல மேரி, பிரேமா மோரிஸ், ராணி - சென்னை; மேரி - இளையரசனேந்தல்; புஷ்பக்கண்ணு, மிக்கேல்சாமி – கோவை; சிப்ரியான் - தெளி; ததேயுஸ் கரோலின் - திருப்பூர்.

## குலுக்கல் முறையில் பரிசு பெறுபவர்கள்

அருட்சகோதரி. எமரேன்ஸ் மேரி திண்டுக்கல்

திருமதி. P. ராணி சென்னை

Owned and Published by THE ORDER OF SERVANTS OF MARY from Jyothi Matha Alayam. 5/301 Matha Koil Street, Rajiv Gandhi Salai(OMR), Okkiampet, Chennai – 600 097 and Printed by M. RAJA REGAN at Devan Press, Old No.138/1, New No.158/1, Venkatachala Mudali Street, Royapettah, Chennai – 600 014.
Editor: Fr. R.M. UGIN WINNER OSM.







# துயரம்

## பதிப்பாசிரியர் பக்கம்

**ர.ம. யூஜின் வின்னர் ம.ஊ.ச**

செப்டம்பர் மாதத்தில் அன்னை மரியாளின் மூன்று திருவிழாக்களை நாம் கொண்டாடுகின்றோம். அன்னை மரியாளின் பிறப்பு திருவிழாவும், அன்னையின் தூய்மைமிகு திருவிழாவும் மகிழ்ச்சியின் விழாக்களாக இருக்கின்றன. செப்டம்பர் 15 ஆம் தேதி நாம் கொண்டாடுகின்ற விழா அன்னையின் வியாகுலங்களை அதாவது அன்னையின் துயரங்களை நினைவுபடுத்துகின்றது.

நம் அன்னையின் வாழ்க்கையை எடுத்துக்கொண்டோம் என்றால் வெறும் ஏழு வியாகுலங்களை மட்டும் கொண்டிருக்கவில்லை. அவர்கள் வாழ்நாள் முழுவதும் பல ஆயிரம் துயரங்களைக் கொண்டிருந்தார். ஆண்டவர் இயேசுவைக் கருவில் சுமந்தது முதல் ஆண்டவர் இயேசுவின் இறப்பு வரை அன்னை மரியாளின் வாழ்க்கை துயரங்களால் சூழ்ந்திருந்தது.

திருமணத்திற்கு முன் ஒரு பெண் கருவுற்றிருந்தால் யூதச் சட்டப்படி அவரை கல்லால் எறிந்து கொல்ல வேண்டும். அன்னை மரியாளும் திருமணத்திற்கு முன்னால்தான் கருவுறுகின்றார். அது யூத சமுதாயத்திற்கு தெரிய வந்தால் அன்னை மரியாளுக்கு மரண தண்டனை நிச்சயம். இருந்தும் அன்னை மரியாள் இறைவனின்

## உள்ளே


| | | |
|---|---|---|
| புனித வியாகுல அன்னை | - | 06 |
| அன்னையின் திருத்தலங்களை நோக்கி | - | 09 |
| விவிலிய குறுக்கெழுத்துப் போட்டி | - | 14 |
| பார்புகழ் பாத்திமா அன்னை வரலாறு | - | 16 |
| ஞாயிறு திருவழிபாட்டுத் துணைவன் | - | 17 |
| மரியின் ஊழியர்சபையின் புனிதம் | - | 24 |
| மரியா - கடவுளின் கடிதம் | - | 25 |
| குடும்ப வாழ்வில் மரியா | - | 28 |
| நல்லாசிரியர் இயேசு | - | 30 |
| ஜீவ மாதாவிடம் ஜீவன் வேண்டி | - | 32 |

திட்டத்திற்கு ஆம் என்று பதில் கூறுகின்றார். இது அன்னை மரியாள் தேர்ந்து கொண்ட துயரம்.

தான் தூய ஆவியினால்தான் கருவுற்றிருக்கின்றேன் என்று தன்னை திருமணம் செய்ய இருக்கும் புனித யோசேப்புக்கு புரிய வைப்பது அன்னை மரியாளுக்கு இன்னொரு துயரமாக இருக்கின்றது. நிறைமாத கர்ப்பிணியான அன்னை மரியாள் குழந்தை இயேசுவைப் பெற்றெடுப்பதற்கு என்று ஒரு சத்திரம் கூட கிடைக்கவில்லை, மாட்டுத் தொழுவத்தில் இயேசுவைப் பெற்றெடுத்தது இன்னொரு துயரமாக இருக்கின்றது.

பெற்றெடுத்த குழந்தையை சொந்த நாட்டில் வளர்க்க முடியாமல் ஏரோதுக்கு பயந்து எகிப்து நாட்டில் வளர்க்கின்றார்கள். சொந்த நாட்டினை விட்டு இன்னொரு நாட்டிலே அகதிகளாக வாழ்வது என்பது இன்னொரு துயரமாக இருக்கின்றது. காணாமல்போன இயேசுவைக் கண்டவுடன் அவர் சொன்ன வார்த்தைகளான "நான் என் தந்தையின் அலுவல்களில் ஈடுபட்டிருப்பேன் என்று உங்களுக்குத் தெரியாதா?" இதைக் கேட்டதும் அன்னை மரியாள் கொண்ட துயரத்திற்கு அளவே கிடையாது.

குடும்பத்துடன் சென்றிருந்த கானாவூர் திருமணத்தில் திராட்சை இரசம் தீர்ந்து போகின்றது. அன்னை மரியாள் இயேசுவிடம் வந்து திராட்சை இரசம் தீர்ந்து போய்விட்டது என்று சொன்னதும் "அம்மா அதைப் பற்றி நாம் என்ன செய்ய முடியும், எனது நேரம் இன்னும் வரவில்லையே" என்று சொன்னதும் அதைக் கேட்ட அன்னை மரியாள் துயரம் கொள்கின்றாள்.

ஆண்டவர் இயேசு வளர்ந்து பெரியவராக இருக்கின்றார். அவரின் போதனைகளையும், வல்ல செயல்களையும் கண்டு பொறாமை கொண்ட சிலர், இயேசுவை, இவன் ஒரு பைத்தியக்காரன், இவன் பேய்களின் தலைவனைக் கொண்டுதான் பேய்களை ஓட்டுகின்றான் என்று பலக்குற்றச்சாட்டுக்களை முன்வைத்ததும் தன் மகன் இயேசுவை வீட்டிற்கு அழைத்து வருவதற்காக, அவரை சந்திக்கச் செல்லும் போது "யார் என் தாய்" என்று கேட்டபோது அன்னை மரியாள் துயரம் அடைகின்றாள்.

பெற்ற மகன் தன் கண்முன்னால் சிலுவையில் அறையப்பட்டுக் கொல்லப்படும்போது ஒரு தாயாக அன்னை மரியாள் நிச்சயம் துயரம் அடைந்திருப்பாள். இப்படி வாழ்நாள் எல்லாம் துன்பம் அனுபவித்த அன்னை மரியாள் நம்முடைய கிறிஸ்தவ வாழ்க்கைக்கு ஒரு பாடத்தைக் கற்றுக் கொடுக்கின்றாள்.

துயரம் என்பது கடவுள் காட்டுகின்ற இன்பத்திற்கு செல்லக் கூடிய பாதை. கிறிஸ்தவ துயரம் என்பது குறுகிய காலத்தில் முடியக்





**சாந்தி மணி - மாடம்பாக்கம்**

எங்கள் இடத்தில் வீடு கட்டுவதற்கு நிறைய பிரச்சனைகள் இருந்தது, நான் ஜீவ மாதா ஆலயத்திற்கு வந்து ஜெபித்து சென்ற ஐந்து நாட்களில் வீட்டைக் கட்ட ஆரம்பிப்பதற்கு ஆண்டவர் கிருபை செய்தார். இப்போது கட்டிமுடித்து கிரகப்பிரவேசம் செய்துள்ளோம். ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**ராணி - கோடம்பாக்கம்**

என்னுடைய மருமகளுக்கு திருமணமாகி பல வருடங்கள் ஆகியும் குழந்தை செல்வம் இல்லை. நானும் அவளும் ஜீவ அன்னையின் ஆலயத்திற்கு வந்தோம் அன்னை மரியிடம் விவாதமிட்டேன், என் மருமகளுக்கு ஓர் குழந்தையை கொடுக்க வேண்டமென்று. அதேபோல் அவள் ஓர் குழந்தையை பெற்றெடுத்தாள். ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**விமலா சென்வந்திரன் - சின்னமலை**

எனக்கு 2013 ஆம் ஆண்டு திருமணமானது. ஆனால் குழந்தை செல்வம் இல்லை. என்னுடைய நண்பர்கள் இந்த ஆலயத்தைக் குறித்து சொன்னார்கள். நானும் என் கணவரும் தொடர்ந்து ஜீவமாதா ஆலயத்திற்கு வந்தோம். காலதாமதம் ஆனாலும் இரட்டிப்பான பலனைப் பெற்றேன். எனக்கு இரட்டைப் பிள்ளைகள் பிறந்தனர். ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**மஞ்சு – சித்தாலப்பக்கம்**

எனது தங்கையின் பெயர் ஆர்த்தி. அவளுக்கு திருமணமாகி சில நாட்களில் கரு உருவாகி பிறக்கும் சில காலங்களில் குழந்தை இறந்துவிட்டது. அதன்பின் நானும் என் தங்கையும் ஜீவ மாதா ஆலயத்திற்கு வந்து ஜெபித்தபிறகு ஒரே மாதத்தில் கருவுற்று ஓர் ஆண்மகனை பெற்றெடுத்தாள். ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**கஸ்தூரி – செஞ்சிக்கோட்டை**

என்னுடைய அண்ணனுக்கு 2021 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் செஞ்சிக்கோட்டை அருகில் விபத்து ஏற்பட்டது, இரத்தம் நிறைய தேவைப்பட்டது. நானும் என் தாயாரும் ஜீவ அன்னையின் ஆலயத்திற்கு வந்து மன்றாடினோம். அதற்கு பலனாக ஆண்டவர் இரண்டே மாதத்தில் நன்றாக நடப்பதற்கு உதவி செய்தார். அதே போல் என் அண்ணி கருவுற்றிருந்த நிலையில் குழந்தைக்கு சரியான உடல் சுபாவம் இல்லை என்று மருத்துவர்கள் சொன்னார்கள். அன்னையிடம் மன்றாடி சுகப் பிரசவத்தில் ஒரு ஆண் குழந்தை பிறந்தது. ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**வின்னேட் மேரி – சோழிங்கநல்லூர்**

நான் இந்த பங்கைச் சார்ந்தவள். எனக்கு கருப்பையில் கட்டி இருப்பதாக கூறி சிகிச்சை நடைபெற்றது, சிகிச்சை முடிந்த இரண்டு நாட்களில் எனக்கு திரும்பவும் வயிறு பெரிசாக உப்பி விட்டது. திரும்பவும் மருத்துவமனைக்குச் சென்றால் வயிற்றில் தண்ணீர் இருப்பதாகவும், நுரையீரலில் கட்டியிருப்பதாகவும் மற்றும் இதயத்தில் ஏதோ பிரச்சனையிருப்பதாகவும் கூறினர். இதைக் கேட்ட என் கணவர் மனமுடைந்து போனார். நான் அன்னையிடம் மன்றாடினேன். அதேபோல் தேவன் எனக்கு கிருபை செய்து ஒரே வாரத்தில் உடல் சுகமாகி வீடு திரும்பினேன். ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!



# ஜீவ மாதாவிடம் ஜீவன் வேண்டி

செல்வி. யாழினி ஜோஸி விக்டர்
சோழிங்கநல்லூர், சென்னை

ஆகஸ்டு மாதம் 6 ஆம் தேதி மாதத்தின் முதல் சனிக்கிழமை. ஜீவ மாதாவுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட நாள். வழக்கம்போல பக்தர்கள் கூட்டம் அதிகமாகவே காணப்பட்டது. வந்திருந்த அனைத்து மக்களும் பக்தியோடு செபமாலை, குணமளிக்கும் நற்கருணை ஆராதனை, சாட்சியப் பகிர்வு, திருப்பலி என்று அனைத்து திருவழிபாட்டு நிகழ்வுகளிலும் கலந்துகொண்டு இறையாசியை அன்னையின் பரிந்துரை வழியாக வேண்டினர். மேலும் அவர்கள் கூறிய சாட்சியங்கள் பலரது வாழ்வில் நம்பிக்கை ஒளியை பிரகாசிக்க வைத்திருக்கின்றது. அந்த சாட்சியப் பகிர்வுகள் இதோ உங்களுக்காக:

**டாரோஸ் - வேளச்சேரி**

என்னுடைய கணவரின் அண்ணனுடைய மகனுக்கு திருமணமாகி பல வருடங்கள் ஆகியும் குழந்தை பாக்கியம் இல்லை என்னிடம் ஜெபிக்க சொல்லி கேட்டார்கள் அப்போது நான் ஜீவ மாதாவின் ஆலயத்தை பற்றி அவர்களிடம் சொன்னேன், அவர்கள் குடும்பத்தோடு ஆலயத்திற்கு ஒரு வருடம் தொடர்ந்து வந்தார்கள் அன்னையிடம் ஜெபித்தார்கள். அவர்களுக்கு கிடைத்த பலன், ஆண்டவர் அருளால் ஓர் அழகிய ஆண் குழந்தையை பெற்றெடுத்தாகள். ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**ஸ்வேமு – துபாய்**

எனக்கு திருமணமாகி எட்டு வருடங்களாக குழந்தை பாக்கியம் இல்லை. என்னுடைய பெற்றோர் இந்த ஆலயத்திற்கு 2019 ஆம் ஆண்டு முழுவதும் வந்தார்கள். ஆண்டவர் கிருபையால் ஓர் ஆண்மகனை பெற்றெடுத்தேன் அதன்பிறகு ஓர் பெண் குழந்தையை பெற்றெடுத்தேன். ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**மோனிக்கா மணி – பள்ளிக்கரணை**

எனக்கு திருமணமாகி ஐந்து வருடங்கள் ஆகியும் குழந்தை இல்லை உருவானாலும் கரு சிதைந்து விடும். என்னுடன் வேலை செய்யும் எனது நண்பர் இந்த ஆலயத்தைக் குறித்தும் அதன் சிறப்பையும் எடுத்துக் கூறினார், நானும் என் கணவரும் இங்கு வந்து ஒப்புக் கொடுத்து ஜெபித்தோம். அடுத்த மாதமே குழந்தை உருவானது. குழந்தையை ஆரோக்கியமாக பெற்றெடுத்தேன். ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**சிந்து - அடையார்**

எனக்கு திருமணமாகி மூன்று வருடங்கள் ஆகியும் குழந்தை இல்லை. என் கணவருடன் வேலை செய்யும் ஒருவர் இந்த ஆலயத்திற்கு வரும்படி சொன்னார். இங்கு வந்து வேண்டினேன். இரண்டு மாதங்களில் கரு உருவானது. இப்போது ஏழாம் மாதம். சுகப்பிரசவம் ஆவதற்கு ஜெபிக்கிறோம். ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!





கூடியது. கிறிஸ்தவ இன்பம் என்பது முடிவில்லா காலத்தை உள்ளடக்கியது. முடிவில்லா நீண்ட இன்பத்தைப் பெறுவதற்காக குறுகிய துயரத்தை ஏற்றுக் கொள்வதற்கு நாம் தயாராக இருக்க வேண்டும்.

காய்க்கின்ற மரம்தான் கல்லெறிபடும், அன்னை மரியாளைப் பொறுத்தவரை, அவர் ஆண்டவர் இயேசு என்னும் கனியை உலகிற்கு கொடுத்திருக்கின்றார். அதனால்தான் அவர் மீது எத்தனையோ துயரக் கற்கள் வீசப்பட்டிருக்கின்றன.

அன்னை மரியாளின் பிறப்பைக் கொண்டாடும் நாம் அவரின் துயரங்களையும் நினைவில் கொண்டு கொண்டாடுவோம். துயரங்கள் கண்ணீர் விட்டு அழுவதற்கு மட்டுமல்ல, நம் வாழ்க்கையை புதுக் கோணத்தில் எதிர்கொள்வதற்கும் காரணியாக இருக்கின்றது.

**துயரம் வாழ்வில் துவண்டு போவதற்கு அல்ல, துணிவுடன் எதிர்கொள்வதற்கு!**

## வாசகர்களின் கவனத்திற்கு!

**அன்பார்ந்தவர்களே!**

**2022 ஆம் ஆண்டு சந்தா ரூபாய் 150- ஐ தயவுசெய்து செலுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம். இவ்விதழானது பலரை சென்றடையவும் அன்னையின் புகழை பாரதமெங்கும் பகிர்ந்திடவும் ஒத்துழையுங்கள். ஆகட்டும் மாத இதழின் வளர்ச்சிக்காக உங்களால் முடிந்த நன்கொடைகளைக் கொடுத்து அன்னை மரியாவின் வழி இறைப்பணி செய்ய தோள்கொடுக்க உங்களை கேட்டுக்கொள்கிறோம். சந்தா செலுத்துபவர்கள், மணியார்டர் மூலமாகவோ, வங்கி கணக்கு மூலமாகவோ, Google Pay மூலமகாவோ செலுத்தலாம். தகவல்கள் இரண்டாம் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.**

## குறிப்பு

**சந்தா பணத்திற்கான Receipt தபால் மூலமாக உங்களுக்கு அனுப்பி வைக்கப்படும். ஆகவே உங்கள் முகவரியை தெளிவாக குறிப்பிடும்படி கேட்டுக்கொள்கின்றோம்.**

# புனித வியாகுல அன்னை

அருள்சகோதரி. டெக்லா ம.ஊ.ச.,
செர்வைட் தலைமையகம், சென்னை.

**தொடக்கவுரை**

செப்டம்பர் மாதம் மலர்ந்ததும் மரியின் ஊழியர் மனம் மகிழ்கின்றனர். அதிகாலையில புனித வியாகுல அன்னைக்கு வேண்டுதல் புரிந்து இம்மாதம் முழுவதும் அவரோடு பயணிப்பது இச்சபையாளரின் சிறப்பான பண்பாகும். வியாகுல அன்னையின் சிறப்பான பண்புகள், உயர்ந்த புண்ணியங்கள், துன்புறும் ஆன்மீகம், மனுக்குல மீட்புத்திட்டத்தில் அவர் ஆற்றிய பங்கினை உள்வாங்கும் மாதம் இம்மாதம். அனைத்திற்கும் முத்தாய்ப்பாக செபடம்பர் 15 ஆம் நாள் வியாகுல அன்னைக்கு விழா எடுத்து மகிழ்கின்றனர். மரியின் ஊழியர் மட்டுமல்ல, கத்தோலிக்கர்கள் அனைவருக்கும் குறிப்பாக துன்புறுவோருக்கு நம் அன்னையின் சிறந்த மாதிரிகையாகத் திகழ்கின்றார். இயேசுவின் பிறப்பு முதல் இறப்புவரை அவரின் இன்ப, துன்ப நிகழ்வுகளில் முழுமையாக பங்கேற்றவர் மரியா. இயேசுவின் பாடுகள், சிலுவை மரண நேரங்களில் அவரது அன்னை உடனிருப்பு பெரும் ஆறுதலாக இருந்தது. இதே வியாகுல அன்னை இன்றும் நம்மோடு பயணிக்கின்றார். நமது துன்பங்கள், சோதனைகள், இழப்புகள், பிரிவுகள் அனைத்திலும் உறுதுணையாக இருக்கின்றார். நமது அருகில் அன்னையாய் இருந்து அரவணைக்கும் அவர் துன்பங்கள், வியாகுலங்களின் கொடுமுடிக்குச் சென்றவர். அவர் தரும் செய்தியை இக்கட்டுரை வழி நமதாக்குவோம். துன்பப் பாதையில் துணிந்து செல்ல திடம் பெறுவோம்.

**வியாகுலத்தாயின் தொடக்கம்**

குழந்தை இயேசு பிறந்த 40 ஆம் நாள் பெருமகிழ்வுடன் மரியா எருசலேம் ஆலயத்திற்கு விரைகின்றார். வயதான இறைவாக்கினர் சிமியோன் குழந்தையை உலகின் ஒளியாக , மீட்பராகப் புகழ்கின்றார். பின்னர் குழந்தையை தாயிடம் ஒப்படைத்துவிட்டு , இக்குழந்தையினால் உன் இதயம் ஓர் வாளால் ஊடுருவப்படும் எனும் அதிர்ச்சியான சொற்களை உதிர்க்கின்றார். அன்னைக்கு அதன் அர்த்தம் அப்போது புரியவில்லை. கடவுளே தன் கரத்தில் இருக்கும்போது கவலை என்ன என்ற மனநிலையுடன் இல்லம் ஏகினார். இந்நிகழ்வுகளுக்குப்பின் துன்பங்கள் பின்தொடர்கின்றன. அன்னை இறையருளை நிறைவாய்ப் பெற்றிருந்ததாலும் அவர் அனுபவிக்க வேண்டிய துன்பங்களை இறைவன் அவருக்கு கொடுத்தார். ஆனால் அவை எல்லாம் மனிதர்





நம் வாழ்வின் சாரமாய் இருந்து கொண்டிருப்பார்.
அத்தகைய ஆசிரியர்களில் ஒருவராய்
இன்றைய மாணவர் மனதில் நான் இருக்கின்றேனா?
செப்டம்பர் 5 ஆம் நாளாகிய ஆசிரியர் தினத்தில்
நம்மையும் நம் ஆசிரியர் பணியையும்
சுய ஆய்வு செய்வோம்.
நிறைகளைப் பெருக்குவோம், குறைகளை நீக்குவோம்!

ஆசிரியர்களாகிய நமக்கு
அறவுப் பணியோடு சமூகப் பணியும் உண்டு
அறிவைத் தருவதன் நோக்கம் அவ்வறிவின் துணையோடு
இச்சமூகத்தைத் தூர்வாரி தூயதாக்குவதே
நம் பணியால் மாணவர் தம் வாழ்வில்
மாற்றங்களைக் காண வேண்டும்
நேற்று நம்மிடம் பயின்று போன மாணவர்தாம்
உலகம் வியக்கும் சாதனைகளையோ
உலகம் துடிக்கும் சோதனைகளையோ ஆற்றுகின்றனர்
நல்ல தலைவர்களை உருவாக்கவில்லை என்றாலும்
நாளைய தீவிரவாதிகள் வெளிவராமல்
நாட்டைக் காப்பது நம் கடன்!

ஆசிரியர்களாகிய நாம்
உண்மை, உழைப்பு, உயர்வு - இவற்றைப் போற்றி
கனிவு, பணிவு, துணிவு - இவற்றைப் பேணி
ஒழுக்கம், நாணயம், நேர்மை - இவற்றைப் பின்பற்றி
மாணவ சமுதாயத்தை மலர வைப்போம்
'நல்லாசிரியர்' விருது பெறாவிட்டாலும்
'நல்ல மனிதர்' என்னும் சமூக விருதைப் பெறுவோம்!

ஆசிரியர்களுக்கெல்லாம் ஆசிரியர்
இன்றைய ஆசிரியர்கள் பின்பற்ற வேண்டிய
மாதிரி ஆசிரியர், நல்லாசிரியர் இயேசு
நம்மீது நிறையாசீர் பொழியட்டும்!

# நல்லாசிரியர் இயேசு

திருமதி. ஃபிலோம்மா, திருச்சி.

“மூன்று நாட்களுக்குப்பின் அவரைக் கோவிலில் கண்டார்கள். அங்கே அவர் போதகர் நடுவில் அமர்ந்து அவர்கள் சொல்வதைக் கேட்டுக் கொண்டும், அவர்களிடத்தில் கேள்விகளை எழுப்பிக் கொண்டும் இருந்தார். அவற்றைக் கேட்ட அனைவரும் அவருடைய புரிதல் திறனையும், அளித்த பதில்களையும் கண்டு மலைத்துப் போயினர்”.(லூக் 2:46-48)

‘ரபி’ - இதன் பொருள் சமயப் போதகர் என்பது

இயேசுவை ‘ரபி’ என அழைத்தனர்- ஏனெனில்

அவர் ஒரு சமயப் போதகர்- ஆசிரியர்

இயேசுவின் சீடர்கள், பரிசேயர், மறைநூல் வல்லுநர்கள்

அனைவருக்கும் இயேசுவே ஆசிரியர்

இயேசு செபக்கூடங்களில் கற்பித்தார்

அன்றைய சமூகஅநீதி அமைப்பு மாறி

நீதியும், சமத்துவமும், அன்பும் நிறை சமூக அமைப்பு அமைய

கற்பித்தவர் ஆசிரியர் இயேசு

“இறையாட்சி நெருங்கிவிட்டது,

மனம்மாறி நற்செய்தியை நம்புங்கள்”

என்பதே இயேசுவின் கல்விக் கொள்கை

“நான் யார் என மக்கள் சொல்கிறார்கள்?....

நீங்கள் என்னை யார் எனச் சொல்கிறீர்கள்” –(லூக் 9:18-22)

இன்றைய ஆசிரியர்கள் மாணவர்களிடம்

இதே வினாவை விடுக்கலாமே!

நம் ஒவ்வொருவருடைய கல்விப் பருவத்திலும்

நமக்குக் கற்பித்த ஆசிரியர் ஒருவரின்

பண்புநலன்கள், கற்பித்தல் திறன், ஆளுமை-இவை

நம் மனத்தில் ஆழமாய்ப் பதிந்திருக்கும்

மறக்க இயலாத அந்த ஆசிரியர்





மீட்படைய தேவையாக இருந்தன. மனிதரின் சுயநலத்தால், புரியாமையால், வெறுப்பினால் யூத சமய அரசியல் தலைவர்களால் உருவான அனைத்து துன்பங்களையும் மரியா இறைவனின் கரத்திலிருந்தே பெறுவதாக எண்ணினார். நம்பிக்கையில் அவரது வாழ்வுப் பயணம் நகர்ந்தது.

**ஏழு வியாகுலங்கள்.**

புனித வியாகுல அன்னையை நினைக்கும்போது அவர் அனுபவித்த ஏழு வியாகுலங்கள் நம் மனத்தில் நிழலாடுகின்றன. ஏழு அல்ல ஏழாயிரம் துன்ப வாள்கள் அவரது இதயத்தை ஊடுருவின. ஆயினும் மரபுத் திருஅவையால் அன்னையின் வாழ்வில் நிகழ்ந்த ஏழு முக்கிய நிகழ்வுகளில் அவர் அதிகம் வேதனை அடைந்த வியாகுலங்களைப் போற்றி தியானித்து வருகின்றோம்.

1. சிமியோனின் இறைவாக்கு
2. குழந்தை இயேசுவை எகிப்து நாட்டுக்கு எடுத்துக் கொண்டு தப்பித்து ஓடியது
3. மூன்று நாட்கள் காணாமற் போன இயேசுவைத் தேடி அலைந்தது
4. சிலுவை சுமந்து கல்வாரிக்குச் சென்ற மகனை வழியில் சந்தித்தது
5. இயேசு சிலுவையில் உயிர்விடும்போது சிலுவை அருகில் நின்றது
6. சிலுவையினின்று இறக்கிய தம் அன்பு மகனை மடியில் சுமந்தது
7. கல்லறையில் தனது மகனை அடக்கம் செய்ததால் தனிமையில் வாடியது

இன்றும் இந்த ஏழு வியாகுலங்களும் தொடர்கின்றன. கடினமான வார்த்தைகளால் உள்ளங்கள் காயப்படும்போது புலம்பெயர்ந்த தொழிலாளர்கள், அகதிகள் முகவரியின்றி அலையும்போது, வறுமையினால் சிறுவர்கள் காணாமற் போகும்போது, அன்றாடம் இல்லங்களிலும் அலுவலகங்களிலும் பெண்களும், பெண்குழந்தைகளும் சிலுவைகளை சந்திக்கும்போது, மாசற்ற உயிர்கள் துச்சமென மதிக்கப்பட்டு மாளும்போது, உணவுப் பொருள் இன்றி பசியுற்ற குழந்தைகளை மடியில் கிடத்தி கண்ணீர் உதிர்க்கும் தாய்மார்களில், பெற்ற பிள்ளைகளால் கைவிடப்பட்டு முதியோர் இல்லங்களில் தனிமையில் வாடும் பெற்றோர்களில் இன்னும் அன்னையின் வியாகுலங்கள் தொடர்கின்றன. துன்புறும் தாய்மார்களோடு அன்னையும் ஆறுதலாக, உயிர்ப்புள்ள ஆற்றலை உணர்த்தியவராகப் பயணிக்கின்றார். நமது அன்னையோடு இணைந்து வியாகுலங்களை இயேசுவின் பாடுகளோடும் மரியின் வியாகுலங்களோடும் ஒன்றித்து மீட்பின் **சாதனைகளாகப்** பார்க்கப் பழகுவோம்.

**புனித வியாகுல அன்னை**

செப்டம்பர் 15 ஆம் நாள், வழிபாட்டில் ஒரு அருமையான வாக்கியம் இடம் பெறுகிறது. மரியா சிலுவையில் நின்று சாகாமலே வேதசாட்சிக்குரிய முடியைப் பெற்றுக்கொண்டார். அன்னை அனுபவித்த துன்பங்களின் கொடுமுடி அவர் சிலுவையடியில் நின்றது. மூன்று மணிநேரம் தனது ஒரே மகன், நிர்வாணமாக, இரத்தக்காயங்களுடன்

விண்ணிற்கும் மண்ணிற்குமிடையே உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கும் துன்பத்தின் உச்ச நிலையைப் பார்த்து உள்ளம் நொறுங்குண்டவராக இருந்தார். அந்த நிலையிலும் அன்புச்சீடர் வழியாக இந்த மனுக்குலத்தின் தாயாகும் பொறுப்பினை பணிவுடன் ஏற்றுக்கொள்கிறார். இவ்வாறு துன்புறும் மக்களின் அருகில் எந்நாளும் நின்று அவர்களை அரவணைக்கும் தாயாக இருக்கின்றார். சிலுவையில் உயிர்விடுமுன் அவரின் அன்பு மகன் உதிர்த்த ஒவ்வொரு வார்த்தையும் மரியின் இதயத்தில் பிறந்தது. தாகமாக இருக்கிறது என்பதைக் கேட்டதும் தண்ணீர் கொடுக்க ஆள் இல்லையே என பரிதவித்துப் போகிறார். எல்லாம் நிறைவேறிற்று என்று கூறி தம் ஆவியை விண்ணகத்தந்தையின் கரத்தில் ஒப்படைக்கும்போது அன்னையின் உள்ளம் எவ்வாறு அங்கலாய்த்திருக்கும். சிலுவையின் அருகில் இன்னும் நெருங்கிவந்து அதை அணைத்திருப்பார். இறந்த பின்னும் அவரது விலாவை ஈட்டியால் குத்தியபோது அவரது இதயமே நின்று போனதுபோல் ஆனது. இறந்த மகனை மடியில் கிடத்தி தனது கண்ணீரால் காயங்களைக் கழுவ விரும்புகிறார். கல்லறையில் அடக்கம் செய்தபின் உயிர்ப்பு நிகழ்வு வரை ஆழ்ந்த அமைதியில் உறைந்தார். இயேசுவின் பாடுகளும் மரணமும் மீண்டும் மீண்டும் துன்ப அலைகளாக அவரது நெஞ்சில் வந்து மோதின. ஆயினும் துணிவுடன், பொறுமையுடன் அனைத்தையும் ஆகட்டும் என்று ஏற்றுக்கொண்டார். இவ்வாறு கல்வாரியில் இரண்டு பலிபீடங்கள் காணப்பட்டன. ஒன்று திருச்சிலுவை என்ற பீடத்தில் இயேசு பலியானார். மற்றொன்று புனித வியாகுல அன்னையின் இதயத்தில் அவரது வியாகுலங்களால் உருவான பலிப்பீடம். இந்த வியாகுல அன்னை என்றுமே நமது துன்பங்களைத் தாங்கிக் கொள்ள கற்றுத்தருகிறார்.

**நிறைவுரை**

அன்னையின் வியாகுலங்களை நாம் அடிக்கடி தியானிக்க அவர் விரும்புகிறார். புனித வியாகுல அன்னை செபமாலை, துயரப்பாதை போன்ற பக்தி முயற்சிகளால் இயேசுவின் பாடுகளோடு அன்னையின் வியாகுலங்களையும் தியானிப்பது இரு பரிசுத்த இதயங்களுக்கும் ஆறுதலாக இருக்கும். ஏனைய இரு இதயங்களும், இறை , மனித அன்பால் நிறைந்தவை. நாமும் இரு இதயங்களுக்கும் மிக நெருக்கமாக செல்லும்போது நமது துன்பங்கள் நிறைய வாழ்க்கைப் பாடங்களைக் கற்றுத்தரும். துன்பங்களை இறைத்திருவுளத்திற்கு பணிந்து ஏற்றுக்கொள்வோம். நமது துன்பங்களை நாம் தனியாக சுமப்பதில்லை. இயேசுவும் அவரது அன்புத்தாயும் நம்மோடு இருக்கின்றாாகள். இதைப்போன்று நாமும் மற்றவர்களின் துன்பங்களை சுமக்க, எளிதாக்க முன்வரவேண்டும். நாம் நமது வேதனைகளில் கண்ணீர் சிந்தினாலும், மற்றவர்களின் கண்கள் குளமாக ஒருபோதும் இடம் தரக்கூடாது. துன்பங்களை விரும்பி ஏற்போம். அவைகள் நாம் வளர, அமைதிபெற, உள்ளத்தின் ஆழத்தில் நிறைமகிழ்ச்சியை அனபவிக்க உதவியாக இருக்கின்றன. சிலுவையை சுமந்து, வியாகுலங்களை தழும்புகளாக ஏற்று பிறருக்காக வாழ்வோம். இறையாட்சி மலர உழைப்போம். புனித வியாகுல அன்னை நமக்காக என்றும் பரிந்து பேசுவார் என நம்புவோம்.





எனக்கு நிகழட்டும்'' என்று கூறி தன்னையே அர்ப்பணித்தார். அந்த அர்ப்பணத்தில் மரியாவின் மனத்தாழ்மை வெளிப்படுகின்றது.

சமூக வாழ்வில் ஒரு பதவியோ அல்லது பெரிய பொறுப்போ கிடைத்துவிட்டால் சிலர் ஆணவத்தில் ஆடுவதும், அகந்தையில் துள்ளிக் குதிப்பதும், மற்றவர்களை இழிவாகப் பார்ப்பதும் வழக்கம். ஆனால், தான் இறைவனுடைய அன்னையாக அழைக்கபட்டிருந்தும், இறைவனையே குழந்தையாக கருத்தரித்து பெற்றெடுத்தபோதும் தான் கடவுளின் தாய் என்ற கர்வத்தோடோ அல்லது ஆணவத்தோடோ மரியாள் ஒருபோதும் வாழ்ந்ததில்லை. இயேசுவைப் பெறுவதற்கு முன்பும், பெற்ற பின்பும் மனத்தாழ்மையுடன் வாழ்ந்தார். முதல் பெண்மணியான ஏவாள் பாவம் செய்தபோதும் அந்த பாவத்தை ஏற்றுக்கொள்ளாமல் பழியை பாம்பின் மீது சுமத்தினாள். ஆனால், மரியா பாவம் எதுவும் செய்யாமலிருந்தும் மற்றவர்களின் பாவத்தை தன் மீது சுமக்கும் அளவுக்கு தன்னையே தாழ்த்தினார்.

இதே மனத்தாழ்மை திருக்குடும்பத் தலைவரான புனித யோசேப்பிடமும் இருந்ததை நாம பார்க்க முடிகின்றது. எப்பொழுதெல்லாம் வானதூதர் கனவில் தோன்றி இறைத்திட்டத்தை வெளிப்படுத்தினாரோ அப்பொழுதெல்லாம் அதை ஏற்றுக்கொண்டு சிரத்தை எடுத்து செயல்படுத்தும் அளவுக்கு யோசேப்பு மனத்தாழ்மை கொண்டிருந்தார். “ மரியாவை ஏற்றுக்கொள்ள அஞ்சவேண்டாம்'' (மத் 1:20) என்றபோது மரியாவை மனமுவந்து ஏற்றுக்கொண்டார். “குழந்தையையும் அதன் தாயையும் கூட்டிக்கொண்டு எகிப்துக்கு தப்பி ஓடிச் செல்லும்'' (மத் 2:13) என்று அறிவுறுத்திய போதும் கடமை நிறைந்த கணவராகவும், பொறுப்பு நிறைந்த தந்தையாகவும் இருந்து மரியாவையும், குழந்தை இயேசுவையும் ஏரோதிடமிருந்து பாதுகாக்க எகிப்திற்கு பத்திரமாக அழைத்துச் சென்றார். இவையனைத்தும் யோசேப்பின் மனத்தாழ்மையை சுட்டிக் காட்டுகின்றது. எனவே, மரியாள், இயேசு, யோசேப்பு மூவரிடமும் மனத்தாழ்மை இருந்ததை நாம் புரிந்துகொள்ள முடிகிறது.

நம்முடைய குடும்ப வாழ்விலும் நம் ஒவ்வொருவரிடமும் மனத்தாழ்மை இருக்கின்றபோது நாம் மற்றவர்களை முழுமனதுடன் ஏற்றுக்கொண்டு அன்பு செய்ய முடியும். மற்றவர்களுக்காக நம்மையே அர்ப்பணிக்க முடியும். மற்றவர்களின் நலனுக்காக சிறுசிறு நல்ல செயல்களைச் செய்ய முடியும். நம் குடும்ப வாழ்வும் சிறப்பாக அமையும். “கிறிஸ்து இயேசு கொண்டிருந்த மனநிலையே உங்களிலும் இருக்கட்டும்'' (பிலி 2:5) என்று தூய பவுலடியார் கூறுவதுபோல திருக்குடும்பத்தில் வாழ்ந்த மரியா, இயேசு, யோசேப்பிடம் இருந்த மனத்தாழ்மை நம்மிடமும் இருக்கட்டும்: நம் குடும்ப வாழ்வும் சிறக்கட்டும்.

**மரியாளின் குடும்ப பண்புகள் தொடர்ந்து மலரும்.........**



# குடும்ப வாழ்வில் மரியா 7

அருள்பணி. கில்பர்ட்ராஜ் ம.ஊ.ச
சோழிங்கநல்லூர், சென்னை

குடும்ப வாழ்வில் கணவன் மனைவிக்கிடையே, பெற்றோர் பிள்ளைகளுக்கிடையே இருக்க வேண்டிய பண்புகள், குணங்கள் பற்றி சிந்தித்துக் கொண்டிருக்கின்றோம். மரியா குடும்ப வாழ்வில் இருந்த நல்லெண்ணம் பற்றி கடந்த இதழில் சிந்தித்த நாம் மரியா குடும்பத்தில் மேலோங்கியிருந்த மனத்தாழ்மை குறித்து சிந்திப்போம்.

**மரியா குடும்பத்தில் மனத்தாழ்மை**

தாழ்மை என்பது தன்னைவிட அந்தஸ்தில் குறைந்த ஒருவரின் நிலைக்கு இறங்கி வருவதை அல்லது தன்னைவிட தாழ்ந்த நிலையில் உள்ள ஒருவரோடு பழகும்போது ஒரு பதவியிலிருந்தோ உயர்நிலையிலிருந்தோ கீழே இறங்கி வருவதைக் குறிக்கிறது.

"கடவுள் வடிவில் விளங்கிய அவர், கடவுளுக்கு இணையாயிருக்கும் நிலையை வலிந்து பற்றிக் கொண்டிருக்க வேண்டியதொன்றாகக் கருதவில்லை. ஆனால் தம்மையே வெறுமையாக்கி அடிமையின் வடிவை ஏற்று மனிதருக்கு ஒப்பானார். மனித உருவில் தோன்றி சாவை ஏற்கும் அளவுக்கு, அதுவும் சிலுவைச் சாவையே ஏற்கும் அளவுக்குக் கீழ்ப்படிந்து தம்மையே தாழ்த்திக் கொண்டார்" (பிலி 2:6-8) என்று இயேசுவின் தாழ்ச்சியைக் குறித்து தூய பவுலடியார் அழகாகச் சொல்வார்.

இறைமகனாகிய ஆண்டவர் இயேசு பாவம் நிறைந்த மனிதர்களை புனித நிலைக்கு உயர்த்துவதற்காக தம் இறை நிலையிலிருந்து மனித நிலையை ஏற்றுக்கொள்ள தம்மையே தாழ்த்திக் கொண்டார். அப்படித் தாழ்த்தியவர் மனிதர்களுக்கு மீட்பு வழங்குவதற்காக அவமானத்தின் அடையாளமான சிலுவைச் சாவை ஏற்கும் அளவுக்கு மனத்தாழ்மை மிக்கவராக திகழ்ந்தார். "நான் கனிவும் மனத்தாழ்மையும் உடையவன்" (மத் 11:29) என்று இயேசுவே கூறுகிறார். இயேசுவிடம் இருந்த மனத்தாழ்மை திருக்குடும்பத்தின் தலைவியான அன்னை மரியாளிடமும், தலைவரான புனித யோசேப்பிடமும் இருந்தது.

கபிரியேல் தூதர் இறை செய்தியை மரியாளுக்கு அறிவித்தபோது மரியாளிடம் பல கேள்விகள் மற்றும் ஐயப்பாடுகள் இருந்தபோதும், இறைத்திட்டத்தை முழுமையாக அறிந்து கொள்ளாத சூழ்நிலையிலும் வெறுமனே இறைத்திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்ற எண்ணத்தோடு, "நான் ஆண்டவரின் அடிமை: உம் சொற்படியே





# அன்னையின் 45 திருத்தலங்களை நோக்கி...

அருள்பணி. சகாயராஜ் ம.ஊ.ச., மாமல்லபுரம்.



**புனித பனிமய மாதா ஆலயம், தூத்துக்குடி**

கிறிஸ்தவம் இந்தியாவில் தடம் பதித்தது தென் இந்தியாவில் என்பதும், அதிலும் ஆவணப்படுத்தப்பட்ட திருஅவையின் வரலாற்றின் சுவடுகள் தென் இந்தியாவில் அதிகம் காணப்படுவதையும் நாம் அறிவோம். தமிழகத் திருஅவையின் தொடக்க கால வரலாற்றில் முத்துக்குளித் துறைமுகத்திற்கு அழிக்க முடியாத இடம் உள்ளது.

முத்துக் குளித்தலை தங்கள் பிரதான தொழிலாகவும், கடல் வாணிபத்தை இணைத் தொழிலாகவும், மீன் பிடித்தல், மரக்கலம் அமைத்தல், சமுத்திர மறவர் என்னும் பல்வேறு கடல்சார் தொழில்களை துணை நிலைத் தொழிலாகவும் ஏற்று பல நூற்றாண்களாக வாழ்ந்து வந்தனர் பரத மக்கள் முத்தின் வளத்தை அபகரிக்கப் படையெடுத்த பல அந்நிய சக்திகளை எதிர்கொண்ட யுக்தியில் போர்த்துக்கீசியப் பலத்தோடு ஒன்றாக கை கோர்த்து போராடிய சந்தர்ப்பத்தில் வேம்பாரிலிருந்து இராஜாக்க மங்களம் வரையுள்ள ஒட்டு மொத்த பரத இனம் முழுவதும் கி.பி. 1535 ஆம் ஆண்டு தொடங்கி கிறிஸ்தவ திருமறையை தழுவிக்கொண்டது.

பல்வேறு அரசியல் போர்களுக்கிடையில் சிக்கித் தவித்துக் கொண்டிருந்த நெய்தல் புலத்து மக்கள் தங்களை இனப் பேரழிவிலிருந்து காப்பாற்றிக் கொள்ள தங்கள் இனத் தலைவர்களின் வழிகாட்டுதலில் போர்த்துக்கீசியரின் துணையோடு கி.பி. 1535ஆம் ஆண்டு முதல் கி.பி. 1538ஆம் ஆண்டுக்குட்பட்ட காலத்தில் இனம் முழுவதும் ஒருமித்து கத்தோலிக்கத் திருமறையைத் தழுவியது. கோவா மறை மாநில முதன்மைக் குரு பொறுப்பாளர் மிக்கேல் வாஸ், கொச்சி வட்டார குருவானவர் பேதுரு கொன்சால்வஸ் மற்றும் மூன்று குருவானவர்கள் அனைவருக்கும் திருமுழுக்குக் கொடுத்தனர்.

அருட்பணி பேதுரு கொன்சால்வஸ் கி.பி. 1538ஆம் ஆண்டு மக்களின் வழிபாட்டிற்கென தூத்துக்குடியில் முதல் ஆலயத்தைக் கட்டி புனித பேதுரு ஆலயம் என்று பெயரிட்டார். கி.பி. 1535ஆம் ஆண்டிலிருந்து போர்த்துக்கீசியரின் கட்டுப்பாட்டிலிருந்த தூத்துக்குடியை, கி.பி 1638ஆம் ஆண்டு டச்சுக்காரர்கள் பிடித்த போது ஆலயமும் அவர்கள் வசம் சென்றது. ஆங்கிலேயர் ஆட்சியைப் பிடித்த பிறகு பிஷப் கால்டுவெல் மேற்பார்வையில் ஆலயம் பழுதுபார்க்கப்பட்டு மூவொரு இறைவனின் பெயரில் ஆங்கிலிக்கன் ஆலயமாக மாறியது. சுதந்திரத்திற்குப் பின் அது தென்னிந்திய திருச்சபை பயன்பாட்டில் இன்றும் உள்ளது. அந்த ஆலயம் தூத்துக்குடி பழைய துறைமுகத்தின் எதிரில் அமைந்துள்ளது.



முத்துக்குளித்துறையில் ஆன்மீகப் பணியாற்றும் ஆர்வத்துடன் பாரிஸ் நகரிலிருந்து வந்த ஸ்பெயின் நாட்டைச் சார்ந்த புனித பிரான்சிஸ் சவேரியார் கி.பி. 1542ஆம் ஆண்டு இறுதியில் தொடங்கி பல ஆண்டுகள் இப்பகுதியில் பணிபுரிந்தார். முன்பே திருமுழுக்கு பெற்று பெயரளவில் கிறிஸ்தவர்களாக இருந்த மக்களுக்கு மறையைப் பற்றிய போதனைகளை வழங்கினார். செபங்களையும், திருவருட்சாதனங்களையும் விளக்கினார். கி.பி. 1549ஆம் ஆண்டு வரை பல முறை வேம்பாருக்கும் இராஜாக்க மங்களத்திற்கும் இடையே கால்நடையாக ஆன்மீக பணியாற்றினார். இவருக்குப் பின் பணியாற்றிய அந்தோணி கிரிமினாலி முதல் வேதசாட்சியாக வேதாளையில் மரித்தார். அவரைத் தொடர்ந்து கி.பி. 1547 முதல் கி.பி. 1557 வரை புனித பேதுரு ஆலயத்தின் பங்கு குருவாக அருட்பணி. ஹென்றி ஹென்றிக்கஸ் பணியாற்றினார்.

தற்போது பனிமய மாதா ஆலயத்தில் வீற்றிருந்து அருள்பாலிக்கும் சுரூபத்தைப் பற்றி மரபுவழியாக பின்வரும் செய்தி சொல்லப்படுகிறது. புனித சவேரியார் மறைபரப்புப் பணிக்காக சீனா செல்லும் வழியில் மணிலா நகருக்குச் சென்றதாகவும் அங்கு அகுஸ்தீனியன் கன்னியர் மடத்தில் அன்னையின் சுரூபத்தைக் கண்டு முத்துக்குளித்துறை பரவருக்காகக் கேட்டதாகவும், கன்னியர் மடத்துத் தலைவி மறுத்ததாகவும் கூறுகின்றனர். பின் புனிதரின் மரணத்துக்குப் பிறகு, அவர் செய்த புதுமைகளைக் கேள்வியுற்று சந்த் ஹெலெனா கப்பல் மூலம் தூத்துக்குடிக்கு அனுப்பியதாகவும் கூறுகின்றனர். பிலிப்பைன்ஸ் நாட்டிலிருந்து கி.பி. 1555ஆம் ஆண்டு ஜீன் 9ஆம் நாள் சுரூபம் தூத்துக்குடியை வந்தடைந்தது.

அன்னையின் திருவுருவ அழகினைச் சொற்களால் விளக்கிட முடியாது. கனிவுமிகு பார்வையும் பக்தர்களை வாஞ்சையோடு ஆசீர்வதிக்கும் வதனமும் சாந்த மிகு சாயலும் அருள்பொழியும் சமூகமும் தெய்வத்தாய்க்கான அம்சங்களை அற்புத சுரூபத்தை காண்போர் உணரமுடியும். இறைவனின் தாய் என்ற வேதசத்தியத்தைப் பறைசாற்றும் விதமாக சூரியப் பிரகாசத்தை இவர் ஆடை வெளிப்படுத்தும். “அழிவுக்குள்ளாகும் உலகினை இறைமகனோடு வெற்றி கொள்வேன்” என சூளுரைக்க கையில் சேயோடு வளர் பிறை மீது தரிசனம் தருகிறார் அன்னை.

இடது கையில் மார்போடு அணைந்திருக்கும் மீட்பின் கனியாம் இறைமகன், வலது கையில் விலக்கப்பட்ட விதைகள் நிறைந்த பாவப்பழம். ஒவ்வொரு முத்திரையும் மீட்புச் செய்தியை சுருக்கமாய் தாங்கி நிற்க இணைமீட்பராய் இரக்கத்தின் மாதாவாக அருள்பாலிக்கிறார் அன்னை. அன்னையின் திருஉருவமானது புனித பேதுரு ஆலயத்தில் வணக்கத்திற்காக வைக்கப்பட்டது.

கி.பி. 1579ஆம் ஆண்டு சன் பவுல் கல்லூரியானது பரத மக்களின் நன்கொடையால், குருக்களின் தங்கும் இல்லமாகவும், ஓய்வு இல்லமாகவும் கட்டப்பட்டது. இவ்வில்லத்தில் ஞானப் பணிகளுக்கான அறைகள், நிர்வாக அலுவலகம் மற்றும் சிற்றாலயமும் அமைந்திருந்தன. கி.பி. 1582ஆம் ஆண்டு



மரிவழி இறைப்பணி

எந்த விதத்தில் இயேசுவின் பிறப்பிற்கும், மரியாவுக்கு முன்னோடியாகவும் , தயாரிப்பாகவும் இருக்கின்றார்கள் என்று காண்பது அவசியம்.

**4 விளக்கங்கள்**

1. இந்நால்வரில் 3 புற இன மக்கள். ஆனால் உரியாவின் மனைவி பத்சபா யூதப் பெண். இதிலிருந்து கடவுள் மெசியாவை புற இனத்தார்களுக்கும் மீட்பராக அனப்பினார் என்று மத்தேயு காட்டுகின்றார். இந்த விளக்கத்தின்படி மூன்று பெண்களும் மரியாவிடமிருந்து எவ்வாறு வேறுபட்டிருக்கிறனர் என்று தெளிவாகிறது. காரணம் மரியா ஒரு யூதப் பெண். மத்தேயு, மெசியா யூதர்களுக்கும், பிற இன மக்களுக்கும் பிறந்தார் எனக் காட்டுகிறார்.

2. தாவீதின் மகனாக பிறக்க இருக்கும் மீட்பரைப் பற்றிய யூதர்களின் வாதத்தில் இந்த நான்கு பெண்களும் சர்ச்சைக்குரிய நபர்களாக கருதப்பட்டனர். தாவீதின் குலம் இப்பெண்களால் களங்கம் அடைந்திருக்கின்றது என்ற கருத்து நிலவியது. அதேபோல் மரியாவின் வழியாக இயேசுவின் பிறப்பு களங்கம் அடைந்திருக்கிறது. அவர் மீட்பர் இல்லை, பெத்லகேமில் பிறக்கவில்லை என்றெல்லாம் யூதர்கள் கூறியதை மத்தேயு மேற்கோள் காட்டி, இந்த சூழ்நிலைகளில் இறைவன் தன் திட்டத்தை நிறைவேற்றுகின்றார் என்று காட்டுகின்றார்.

3. நான்கு பெண்களும் பாவிகள் :

தாமார் தன் மாமனாரை மணக்கின்றாள்( தொடக்க நூல் 38:24). இராகாப் விபச்சாரியாக இருந்தவர் (**யோசு** 2:1) . ரூத், **போல்** என்பவரை மயக்கி திருமணம் செய்து கொண்டவர். உரியாவின் மனைவி தாவீதிற்கு விபச்சாரம் செய்தார். (2 சாமு 11) இதன்மூலமாக இயேசு பாவிகளை மீட்கவே வந்தார் எனக் காட்டுகிறார் மத்தேயு. மரியாள் பாவி, விபச்சாரி என்ற யூதர்களின் குற்றச்சாட்டுக்கு மத்தேயு இவ்வாறு பதிலளிக்கின்றார். பழைய ஏற்பாட்டில் இந்த நான்கு பெண்களும் கடவுளின் திட்டத்தை நிவைேற்றும் கருவிகளாக அமைந்தார்கள். அவ்வாறே மரியாவும் ஒரு சிறந்த கருவியாக இருந்தார் என மத்தேயு காட்டுகின்றார்.

4. இந்த நான்கு பெண்களும் பாவிகள் என்பதை விட முரண்பாடான திருமண இணைப்பைப் பெற்றவர்கள் என்பதுதான் பொருத்தம். இந்த விதத்தில் மரியாவின் முன்னோடிகளாக திகழ்கின்றார்கள். மத் 1:18-25 ல் கூறப்பட்ட நிகழ்ச்சிகளோடு மிகப் பொருத்தமாக இணைந்து செல்கிறது.

பழைய எற்பாட்டில் உள்ள முக்கியமான பெண்களைவிட்டுவிட்டு ( சாரா, ரெபக்கா, ராக்கேல் போன்றவர்களை) ஏன் முக்கியமற்ற பெண்களை தெரிந்து கொண்டார் என்பது இதிலிருந்து தெரிகிறது.

மத்தேயுவின் திரு அவை, யூத கிறிஸ்தவா்களாலும், புற இன-கிறிஸ்தவர்களாலும் அமைந்தது. எனவே இயேசு இரண்டு பகுதியினரையும் திருப்திபடுத்தும் வகையில் பேசுகின்றார். யூத கிறிஸ்தவா்களை திருப்திப்படுத்த பழைய ஏற்பாட்டு மேற்கோள்கள் ஏராளமாய் இடம் பெறுகிறது. புற இன கிறிஸ்தவா்களை திருப்திப்படுத்த மேற்சொன்ன வாக்கியங்கள், குறிப்பாக திருமுழுக்கு யோவான் கூறும் 3:7-10 வாக்கியங்கள் இடம் பெறுகின்றன.

இந்த இறையியல் கண்ணோட்டத்தை குழந்தை பருவ நிகழ்வுகளில் பார்க்கின்றோம். இதில் இரண்டு முக்கியமான நபா்கள் இடம் பெறுகிறார்கள். அவர்கள் யோசேப்பு, ஞானிகள். யோசேப்பு யூத கிறிஸ்தவர்களின் பிரதிநிதியாகவும் ஞானிகள் புற இனமக்களின் பிரதிநிதிகளாகவும் திகழ்கின்றார்கள்.

**இயேசுவின் மூதாதையர் பட்டியல்**

மத்தேயு நற்செய்தியில் மூதாதையர் பட்டியலை மூன்று பகுதிகளாகப் பிரிக்கலாம். ஒவ்வொரு பிரிவும் 14 தலைமுறை கொண்ட பிரிவுகளாக இருக்கிறது. மத்தேயு செயற்கையாக உருவாக்கிய அட்டவணையில் ஓரளவுக்குத்தான் **ஆராய்ந்து** உண்மைகள் உள்ளது. கிறிஸ்து, தாவீதின் மகன் என்று மத்தேயு அடிக்கடி வலியுறுத்துகின்றார். எபிரேய எழுத்துக்கள் எண்களாகவும் உபயோகப்படுத்தப்பட்டது. தாவீது என்ற சொல்லில், எபிரேயத்தில் 3 எழுத்துக்கள் உள்ளன. இந்த மூன்று எழுத்துக்களையும் கூட்டினால் 14 எண்ணிக்கை வரும்.

மூன்று விதங்களில் மத்தேயு மரியாவை கருத்தில் கொண்டிருப்பது தெளிவாகிறது.

1. தலைமுறை அட்டவணையில் இறுதியில் சங்கிலித் தொடர் போன்ற வசனம் முறிவுபடுகின்றது. யோசேப்பு இயேசுவை பெற்றெடுக்கவில்லை மரியாதான் இயேசுவைப் பெற்றெடுக்கின்றார்.
2. சங்கிலித் தொடர் வார்த்தைகள் முறிவுபடும் காரணத்தை மத்தேயு 1:18-25 ல் விளக்குகின்றார்.
3. தலைமுறை அட்டவணையில் மரியாள் மட்டும் இடம்பெறவில்லை. இன்னும் 4 பெண்கள் இடம் பெறுகின்றனர் (தாமார், இராகாப், ரூத், உரியாவின் மனைவி பெத்சேபா)

வழக்கமாக யூதர்களிடையே தலைமுறை பட்டியலில் பெண்களை குறிப்பிடுவது கிடையாது. இது முற்றிலும் வினோதமான செயலாக தென்படுகிறது. ஏதோ ஒருகாரணத்திற்ாக மத்தேயு இவ்வாறு செயல்பட்டிருக்க வேண்டும். அப்படி என்றால் இந்த நான்கு பெண்களும் எந்த விதத்தில் தங்களுக்குள் **பொருத்த**மையை கொண்டிருந்தார்கள்,





அருட்தந்தை டிகுணா அவர்கள் இச்சிற்றாலயத்தை விரிவுப்படுத்தினார். சில ஆண்டுகளாக பராமரிப்பின்றி இருந்த புனித பேதுரு ஆலயத்திலிருந்த இரக்கத்தின் மாதா திருஉருவம் புதுப்பிக்கப்பட்ட சன் பவுல் கல்லூரி ஆலயத்தில் நிறுவப்பட்டு ஆசீர்வதிக்கப்பட்டது. மேலும், இச்சிற்றாலயமானது இரக்கத்தின் மாதாவிற்கு அர்ப்பணிக்கப்பட்டது.

கொச்சி மறைமாவட்ட ஆயர் மேதகு தவோரா பிரிட்டோ ஆண்டகையால் இப்புதிய ஆலயம் கி.பி. 1582ஆம் ஆண்டு ஆகஸ்டு 5ஆம் நாள் அர்ச்சிக்கப்பட்டது. அன்றைய நாள் பனிமய அன்னையின் திருவிழாவாகவும் அமைந்ததால், இந்நாள் ஆலயத் திருவிழாவாகக் கொண்டாடப்பட்டது. காலப்போக்கில் இவ்வன்னையை பனிமய அன்னை எனவும், இத்தேவாலயம் பனிமய அன்னை தேவாலயம் என்றும் பெயர் பெற்றது.

தூத்துக்குடி இயேசு சபை தலைமை இல்ல திருவிழாவும் ஆகஸ்டு 5ம் நாள் பனிமய அன்னையின் திருநாளோடு சேர்த்துக் கொண்டாடப்பட்டதால் முத்துக்குளித்துறை முழுவதும் உள்ள இயேசு சபை துறவிகளும் இவ்விழாவில் கூடி தங்களது வார்த்தைப்பாடுகளைப் புதுப்பித்துக் கொண்டனர். இறைமக்கள், துறவியர் என அனைவரின் விழாவாக இருந்த பனிமய அன்னையின் விழா மாபெரும் விழா நாளாக அமைந்துவிட்டது.

போர்த்துக்கீசியரிடமிருந்து கி.பி.1658ஆம் ஆண்டு டச்சுப் படையினர் ஆயுத பலத்தால் தூத்துக்குடியை கைப்பற்றினர். அவர்களோடு கால்வீனிய சபையினரும் நிலைகொள்ள ஆரம்பித்தனர். பனிமய அன்னை ஆலயம் ஆயுத கிடங்காகவும், கத்தோலிக்கர்கள் வேத கலாபனைக்கும் உள்ளாயினர். இக்காலத்தில் அன்னையின் திருஉருவம் சிவந்தாகுளம், கொற்கை, மணப்பாடு, பாண்டியன் தீவு போன்ற பல இடங்களில் பாதுகாக்கப்பட்டது. ஏறக்குறைய ஐம்பது ஆண்டுகள் பல்வேறு இடர்ப்பாடுகளுக்கிடையில் மக்கள் தங்கள் விசுவாசத்தில் நிலையாய் வாழ்ந்தனர்.

கி.பி. 1699ஆம் ஆண்டு முதல் முத்துக்குளித்துறையில் பணியாற்றிய அருட்தந்தை விஜிலியுஸ் மான்சி, டச்சு மொழியும் அறிந்தவராயும் இருந்ததால், டச்சு அதிகாரிகளிடம் தனிப்பட்ட முறையில் நட்பு கொண்டிருந்தார். எனவே, கிறிஸ்தவ துறவிகளுக்கான பணித்தடை தளர்த்தப்பட்டது. கி.பி. 1707ஆம் ஆண்டு துறவு இல்லம் ஒன்றும் அதில் ஒரு சிறிய தேவாலயம் ஒன்றும் சன் பவுல் கல்லூரிக்கு அருகிலேயே எழுப்பப்பட்டு அதில் பனிமயத்தாயின் திருஉருவம் உயர் மரப்பேழையில் நிறுவப்பட்டது. வணக்கம் செலுத்தும் நேரம் தவிர மற்ற சமயங்களில் இத்திருஉருவம் திரையிட்டுப் பாதுகாக்கப்பட்டது. இவ்வழக்கம் கி.பி. 1982 வரை இப்பேராலயத்தில் கடைப்பிடிக்கப்பட்டு வந்தது.



அன்னையின் திருஉருவத்தைப் பற்றி நிலவும் மற்றொரு வரலாற்றை இவ்விடத்தில் அறிந்து கொள்வது நலம். கி.பி. 1699ஆம் ஆண்டு தூத்துக்குடி குருவாகப் பொறுப்பேற்ற விஜிலியுஸ் மான்சி

அடிகளார், கி.பி. 1708ஆம் ஆண்டு உரோமைக்கு எழுதிய கடிதத்தில் இலங்கை காலி துறைமுகக் கடற்கரையில் ஒரு மரப்பேழை கரை ஒதுங்கியதாகவும் அதில் அன்னையின் அழகிய சுரூபம் இருந்ததாகவும், அதை ஒரு கத்தோலிக்க பரவர் தூத்துக்குடிக்கு கொண்டு வந்ததாகவும் ஒரு செவி வழிச் செய்தி நிலவுவதாக எழுதுகிறார்.

அன்னையின் திருஉருவம் பிலிப்பைன்ஸிலிருந்து சந்த் ஹெலனா கப்பல் மூலமாக வந்ததா? அல்லது இலங்கை கடற்கரையில் கரை ஒதுங்கிய மரப்பேழையில் திருஉருவம் இருந்ததா? என்ற வினாக்களுக்கு அப்பால் கடந்த பல நூற்றாண்டுகளாக முத்துக்குளித்துரையில் வீற்றிருந்து அருள்பாலித்து வருகிறார் என்பது நிதர்சன உண்மை.

கி.பி. 1707ஆம் ஆண்டு ஏப்ரல் 4ம் தேதி நகரத்தையே தீக்கிரையாக்கும் உக்கிரத்தோடு வீழ்ந்த பேரிடியை, அன்னையவள் தன்னுள் உள்வாங்கி நகரைக் காத்துக் கொண்டார். சேதங்கள் ஏதுமின்றி அன்னையின் திருஉருவம் கருநீல வண்ணமானது. அன்னையின் முன்பாக செபித்துக் கொண்டிருந்த தந்தை விஜிலியுஸ் மான்சியும் அவர் உதவியாளர்களும் அற்புதமாய் உயிர் பிழைத்தனர். தந்தையின் உணர்வுப்பூர்வமான பதிவுகளே இவ்வற்புதத்தின் சாட்சி. அன்னையின் திருஉருவம் மீது படிந்திருந்த கறைகளால் கலக்கமுற்ற இறைமக்கள் தொடர்ந்து நாற்பது நாட்கள் பரிகார பக்தி முயற்சிகளில் ஈடுபட்டனர். இறுதிநாள் செபத்தில் கலந்து கொண்ட இயேசு சபை மாநிலத் தலைவர் முடிவில் இறை உந்துதலோடு தாயின் மேனியை வெண்ணிறத் துணியால் துடைக்க, அற்புதமாக கறைகள் அகன்று முற்றிலும் வடுக்களற்ற, முன்னிலும் பிரகாசமாக அன்னையின் திருஉருவம் தெய்வீகக் கலையோடு சாந்தமே உருவமான அருள் பாலிக்கும் தாய்மையுருவைப் பெற்றது.

கி.பி. 1707ஆம் ஆண்டு வரை தடைபட்டிருந்த பனிமய அன்னையின் பெருவிழா மீண்டும் உற்சாகத்துடன் கொண்டாடப்பட்டது. அழிவிலிருந்து நகரைக் காத்துக் கொண்ட அன்னைக்கு நன்றியாக உறுதியான நிரந்தர ஆலயம் அமைக்க மக்கள் திட்டமிடத் தொடங்கினர். கி.பி. 1709ஆம் ஆண்டு முத்து வளம் அபரிமிதமாக செழித்து பயன் தந்தது. எனவே நன்றியுடன் உடனடியாக ஆலயத்திற்கான முனைவுகள் மேற்கொள்ளப்பட்டன. டச்சு நிர்வாகம் பல தடைகளுக்கும் தாமத்திற்குமிடையே அனுமதி வழங்க, மூன்றான்று கால நீட்டிப்பிற்கு பின் கி.பி. 1712ஆம் ஆண்டு இடியின் புதுமை நாளான ஏப்ரல் 4ம் நாள் அடிக்கல் நாட்டப்பட்டது. முதலில் நடுப்பீடம் கட்டி முடிக்கப்பட்டு அன்னையின் திருஉருவம் நடுநாயகமாக நிறுவப்பட்டது. ஆலய வேலைகள் கி.பி. 1714ஆம் ஆண்டு முற்றுப்பெற்று ஆகஸ்ட் 5ம் நாள் பொதுமக்கள் வழிபாட்டிற்குத் திறந்து வைக்கப்பட்டது. அன்று முதல் இக்கோயிலே இப்பகுதி மக்களின் தாய் கோவிலாக விளங்குகிறது.



தங்களின் வழிபாட்டுத் தலங்களில் தேர்வடம் தொட்டுக் கொடுப்பதை உரிமையாகவும்





# மரியா - கடவுளின் கடிதம்

14



அருள்பணி. லூர்துசாமி ம.ஊ.ச.
நவதுறவியர் இல்லம், மாமல்லபுரம்.

## மத்தேயு நற்செய்தியில் மரியா

மத்தேயு நற்செய்தியில் மரியாவைப் பற்றி கூறும் வசனங்களை இரண்டு பகுதிகளாகப் பிரிக்கலாம்

**1. குழந்தைப் பருவ நிகழ்ச்சிகளில் மரியா (1-2 பிரிவுகள்)**
**2. இயேசுவின் பொதுப்பணி வாழ்வில் மரியா (12,46-50;13-53-58)**

இரண்டாம் பகுதியில் உள்ள நிகழ்வுகள் மாற்கு நற்செய்தியிலும் காணப்படுகிறது. ஆனால் மத்தேயு, தன்னுடைய இறையியல் கருத்துக்களுக்காக சில மாற்றங்களை செய்திருக்கிறார். முதல் பகுதியை ஆராய்ந்து, மத்தேயு மரியாவைப் பற்றி கொண்டிருந்த கருத்து என்ன என்று பார்ப்பது நல்லது. இரண்டாம் பகுதியில் மத்தேயு, மாற்கு கொண்டிருந்த கண்ணோட்டத்திலிருந்து மாறுபடுகின்றன என்று புரிய உதவியாக இருக்கும்.

**குழந்தைப் பருவ நிகழ்வுகளில் மரியா (தொடக்கநூல 1-2)**

இப்பகுதியை ஆராய்வதற்கு முன் மத்தேயு நற்செய்தியின் இறையியல் கண்ணோட்டம் என்ன என்று தெரிந்து கொள்வோம். அடிக்கடி மத்தேயு பழைய ஏற்பாட்டிலிருந்து மேற்கோள் காட்டுகிறார். பரிசேயர், சதுசேயர், இவர்களுக்கு எதிராக சாபம் இடுவது போல் அதிகாரம் 23 இருக்கிறது. இதிலிருந்து, மத்தேயு உருவாக்கிய திரு அவை, யூத மதத் தலைவர்களுடன் சர்ச்சையில் இறங்கியிருக்க வேண்டும் எனத் தெரிகிறது.

கி.பி. 70 ல் யூதர்களின் எருசலேம் ஆலயம் உரோமையர்களால் அழிக்கப்பட்டது. ஏறக்குறைய யூத மதமும் அழிந்துவிட்டது போல தோன்றியது. ஆனால் பரிசேயர்கள் **ஜாமினியாவில்** (வடக்கு இஸ்ரயேல்) கூடி மீண்டும் மதத்தை புதுப்பித்தார்கள். யூத சட்டத்திற்கு முக்கியத்துவம் தரப்பட்டது. இந்த நேரத்தில் பரிசேயர்கள் தங்களது 18 புகழாரங்களில் (12புகழுரைகள் **தப்பறைக்** கொள்கை எதிராக குறிப்பாக கிறிஸ்தவர்களுக்கு எதிராக) சாபம் விட்டு யூத மதத்தை உயர்த்தி எழுதி வைத்தனர். இதன் காரணமாக யூதர்களும் கிறிஸ்தவர்களும் ஒன்றித்து வாழ முடியாமல் போயிற்று. எனவே, மத்தேயு புற இனத்தாரை நோக்கி அக்கறை காட்ட ஆரம்பித்தார் (மத் 28:19) இறை அரசு , தலைமைக் குருக்கள், பரிசேயர்கள் இவர்களிடமிருந்து எடுக்கப்பட்டு பலன் அளிக்கும் பிறநாட்டவருக்கு அளிக்கப்படும் (21:43-45)



## முத்திப்பேறு பெற்ற பாடுகளின் மரியா மதலேனா (1845-1921)



OSM

**அருட் சகோ. பிலிப் ஜோஸப் ம.ஊ.ச**

கோஸ்தான்சா ஸ்தாராச்சே (Costanza Starace), இத்தாலியின் நேபிள்ஸில் (Naples) உள்ள கஸ்தெல்லாமரே என்ற ஊரில் செப்டம்பர் 5, 1845 இல் பிரான்செஸ்கோ ஸ்தாராச்சே மற்றும் மரியா ரோசா காஸ்கோன் ஆகியோருக்குப் பிறந்தார். ஒரு இளம் பெண்ணாக, அவர் டாட்டர்ஸ் ஆ.்ப் சேரிட்டியால் (daughters of charity) நடத்தப்படும் உறைவிடப் பள்ளியில் பயின்றார். இந்த சூழ்நிலை அவளை இறைவனுக்கு அர்ப்பணிக்க தூண்டியது. இருப்பினும், மோசமான உடல்நிலை காரணமாக, அவள் குடும்பத்திற்குத் திரும்பி, வீட்டிலேயே படிப்பைத் தொடர வேண்டியிருந்தது. அவளது படிப்புடன் அவள் ஒரு வலுவான பிரார்த்தனை வாழ்க்கையையும் மேற்கொண்டாள். அவளது உடல்நிலை சீரானபோது, துறவற வாழ்க்கை வாழ விரும்பி, கன்னியர்கள் மடாலயத்தில் (Monastry) நுழைவதற்கான தனது ஆவலை, அவள் பெற்றோரிடம் அறிவித்தாள் அவர்கள் அதை எதிர்த்தனர். ஆனால், மரியின் ஊழியர் மூன்றாம் சபையில் சேர்வதற்கு அவர்கள் எந்த தடையும் விதிக்காததால், ஜூன் 8, 1867 இல், அவர் தனது துறவற வார்த்தைப்பாட்டை, ஆயர் ்.பிரான்செஸ்கோ முன்னிலையில் எடுத்துக்கொண்டார். அவர், சிலுவையில் அறையப்பட்ட இயேசுவின் மீதான அன்போடு சேர்ந்து, வியாகுல தாயின் மீதும் வலுவான பக்தியை கொண்டிருந்தாள். அதனால்தான் தன்னுடைய பெயரை பாடுகளின் மரியா மதலேனா என்று மாற்றிக்கொண்டார். 1871 ஆம் ஆண்டு, இவரின் சிறப்பான சேவையைக் கண்டு வியந்து, ஆயர், அன்னை மரியாவின் மகள்கள் (Daughters of Mary) என்ற ஒரு சிறிய குழுவை தலைமை தாங்கி வழிநடத்தவும், உள்ளூர் குழந்தைகளுக்கு விசுவாசத்தை கற்பிக்கவும் அவரிடம் கேட்டார். இந்த பணியை ஏற்றுக்கொண்டு சிறப்பாக செய்தார். இந்த சிறுகுழுவே பிற்காலத்தில் இரக்கத்தின் மரியின் ஊழியர் (Compassionist Sisters Servants of Mary ) சபையாக உருமாறியது. இதே காலக்கட்டத்தில், காலரா தொற்றுநோய் அந்த பகுதியை பாதித்ததால், சபையின் இளம் சகோதரிகள், முத்திப்பேறு. மரியா மதலேனா அவர்களோடு சேர்ந்து மக்களுக்கு தொண்டு ஆற்றினர். முத்திப்பேறு. மரியா மதலேனாவின் விருதுவாக்கு துன்பப்படுவர்களுக்கு ஆன்மீக அல்லது உடல் ரீதியான அனைத்து தேவைகளிலும் உதவுவதின் மூலம், இயேசுவின் இரக்கத்தையும் வியாகுல அன்னையின் தாய்மையும், இறைமக்களிடம் கொண்டு சேர்ப்பது. இந்த விருதுவாக்கின் மூலம், தன்னுடைய சக சகோதிரிகளிடத்திலும், இறைமக்களிடத்திலும் இறை நம்பிக்கையையும், நற்பண்புகளையும், அவரால் வளர்த்தெடுக்க முடிந்தது. முத்திப்பேறு. மரியா மதலேனா அடிக்கடி கூறுவது கடவுளின் விருப்பமே என் வாழ்வின் ஒரே குறிக்கோள். மற்றும் கடவுளின் விருப்பமே என் சொர்க்கம். பல உடல் மற்றும் ஆன்மீக சோதனைகளுக்கு, முத்திப்பேறு. மரியா மதலேனாவை உட்படுத்த இறைவன் அனுமதித்தார், இது அவர் தொடங்கிய வேலையில் அவரது நம்பிக்கையையும் அர்ப்பணிப்பையும் வலுப்படுத்த உதவியது. முத்திப்பேறு. மரியா மதலேனா 13 டிசம்பர் 1921 அன்று ஸ்கன்சானோ என்ற ஊரில் இறந்து அங்கேயே புனித திரு இருதய ஆலயத்தில் அடக்கம் செய்யப்பட்டார். திருத்தந்தை பதினாறாம் பெனடிக்ட் 2007 இல் முத்திபேறுப் பட்டம் அளித்தார்.





கௌரவமாகவும் கருதியதால் விசுவாச நெருடல்களுக்கு ஆளான இம்மக்கள், கத்தோலிக்க விசுவாசத்தை முதன்மைப்படுத்த கி.பி. 1806ஆம் ஆண்டு முதன் முறையாக அன்னையின் மகிமைக்காக பிரமாண்டமான முதல் கத்தோலிக்கத்தேரை உருவாக்கினர். தங்கமுலாம் பூசப்பட்ட 53 அடி உயரம் கொண்ட அலங்கார சிற்பத் தேர் சிறப்பாண்டுங்களில் அன்னையைத் தாங்கி நகர் வலம் வருகிறது.



மரியன்னையின் மகிமைக்காக உலகின் முதன்மை அதிபேராலயமான ‘மேரி மேஜருடன்’கி.பி. 1960ஆம் ஆண்டு மார்ச் 31ம் நாள் மரியன்னையின் வணக்கமிகு ஆலயங்களுள் ஒன்றாக தூத்துக்குடி மாநகர் பனிமய அன்னை பேரலாயம் திருத்தந்தை புனித 23ம் அருளப்பரால் இணைந்துக் கொள்ளப்பட்டது. தேவதாயின் மீது விசுவாசிகள் கொண்டுள்ள பக்தி வளர்ந்தோங்கவும், அத்தாயின் மகிமை விசுவாசிகளை நிரப்பி ஆட்கொள்ளவும், தாய் மரியாளின் வழியாக இறைவனை மகிமைப்படுத்தவும், தேவ தாயின் பரிந்துரையால் தேவ இரக்கத்தின் நற்பலன்களைப் பெற்று மக்கள் நிறைவு கொள்ளவும் பனிமய அன்னை ஆலயத்திற்குத் திருத்தந்தையின் அதிகார மேன்மையிலிருந்து பரிபூரண பலன்கள் இதன் மூலம் வழங்கப்பட்டன.

தூத்துக்குடி பனிமய அன்னையின் தங்கத் தேர் உலக பிரசித்தி பெற்றதாகும். தூத்துக்குடி மக்கள் எங்கிருந்தாலும் இத்திருவிழாவிற்கு வருவதை தங்கள் பிறப்பின் பயனாக கருதுகிறார்கள். இத்தேர் பவனியானது ஒரு சீரான இடைவெளி இல்லாமல் நடைபெற்று வருகிறது. கி.பி. 1806 -ம் ஆண்டு தொடங்கப்பட்ட இப்பவனி இதுவரை கி.பி. 1872, கி.பி. 1879, கி.பி. 1895, கி.பி. 1905, கி.பி. 1908, கி.பி. 1926, கி.பி. 1947, கி.பி. 1955, கி.பி. 1964, கி.பி. 1977, கி.பி. 1982, கி.பி. 2000, கி.பி. 2007 மற்றும் கி.பி. 2013ஆம் ஆண்டுகளில் நடைபெற்றுள்ளது. தற்போது தூத்துக்குடி மறைமாவட்டம் ஏற்படுத்தப்பட்ட நூற்றாண்டின் நினைவாக கி.பி. 2023ஆம் ஆண்டு அன்னையின் தங்கத் தேர் பவனி நடைபெறும்.

இந்த ஆலயத்தில் மீட்பராம் கிறிஸ்து பாடுபட்ட சிலுவையின் அருளீக்கம் மக்களின் வணக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ளது. இதைத் தவிர புனித சவேரியார், புனித குழந்தை தெரசாள், புனித அந்தோணியார், புனித மரிய கொரற்றி, புனித பாதரே பியோ, புனித பார்பரா, புனித பத்தாம் பத்திநாதர், புனித ஜோசப் பிங்னாலே, புனித அல்போன்ஸம்மாள் மற்றும் புனித அன்னை தெரேசா போன்றோரின் அருளீக்கங்களும் வணக்கத்துடன் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

அன்னையைத் தவிர ஆண்டவரை அண்டி வர வேறோர் துணையில்லை என்பதை தெள்ளத் தெளிவாக நமக்கு உணர்த்துகிறது இத்திருத்தலம். ஆலயத்தை சுற்றி பல வீடுகள் இருந்தாலும் ஆலயத்தினுள் உள்ள அமைதி கட்டாயம் நம்மை இறைப்பிரச்சன்னத்தில் உறைய வைக்கிறது என்பதில் எள்ளவும் சந்தேகமில்லை. இரக்கத்தின் அன்னையாக, பனிமய மாதாவாக நம் மத்தியில் வாழும் அன்னையின் பிள்ளைகளாக வாழ்வோம். இறையாசீர் பெறுவோம்.

இக்கட்டுரையானது, “பனிமயத் தாயின் ஆலய வரலாறு, பரிசுத்த பனிமய மாதா பேராலயம், தூத்துக்குடி” என்ற சிற்றேட்டிலிருந்து முழுமையாக எடுக்கப்பட்டுள்ளது. பேராலய பங்குத் தந்தைக்கும், இவ்வரலாற்றை தொகுத்து வழங்கியுள்ள ஆசியர் குழுவிற்கும் என் மனமார்ந்த நன்றி.

**திருப்பயணம் தொடரும்..................**

# விவிலியக் குறுக்கெழுத்துப் போட்டி
## மத்தேயு



ச. பெ. அமல்ராஜ். ம.ஊ.ச.பொ.நி, திருச்சி - 21

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | | | | | | | | | 1 |
| | 7 | | | | | | | 6 | |
| | | 10 | | | | | | | |
| | | | 12 | | | | | | |
| | | | | | | 14 | | | |
| | | | | | | 13 | | | |
| | | 11 | | | | | | | |
| | | | | | | | 9 | | |
| | 8 | | | | | | | 5 | |
| 4 | | | | | | | | | 3 |

**வலமிருந்து இடம்**

1) சாலமோனின் மகன் ரெகபயாம் ரெகபயாமின் மகன் .............. அபியாமின் மகன் ஆசா.

3) இரக்கமுடையோர் பேறுபெற்றோர் ஏனெனில் அவர்கள் ............... பெறுவர்.

5) மண்ணுலகில் பாவங்களை மன்னிக்க மானிட மகனுக்கு .............. உண்டு என்பதை நீங்கள் அறிந்துகொள்ள வேண்டும்'' என்றார்.

6) அதற்கு இயேசு மறுமொழியாக நீங்கள் கேட்பவற்றையும் காண்பவற்றையும் ............. போய் அறிவியுங்கள்.

9) இயேசு ............. புறப்பட்டுத் தீர் சீதோன் ஆகிய பகுதிகளை நோக்கிச் சென்றார்.

13) ஏனெனில் மின்னல் ............. தோன்றி மேற்குவரை ஒளிர்வது போல மானிட மகனின் வருகையும் இருக்கும்.

14) மணமகளின் ................ எல்லாரும் எழுந்து தங்கள் விளக்குகளை ஒழுங்குபடுத்தினர்.

**இ,டமிருந்து வலம்**

2) சோதிக்கிறவன் அவரை அணுகி "நீர் இறைமகன் என்றால் இந்தக் கற்கள் அப்பமாகும்படிக்............ என்றான்.

4) போலி இறைவாக்கினரைக் குறித்து எச்சரிக்கையாய் இருங்கள். ஆட்டுத் தோலைப் போர்த்திக் கொண்டு............. வருகின்றனர்.

7) முதலில் வலியவரைக் கட்டினாலன்றி எப்படி அவ்வலியவருடைய வீட்டுக்குள் நுழைந்து அவருடைய பொருள்களைக் கொள்ளையிட முடியும்? அவரைக் கட்டிவைத்த பிறகுதான் அவருடைய வீட்டைக் கொள்ளையிட ..........





**முதல் வாசக முன்னுரை**

இறைவாக்கினர் அபக்கூக் வாழ்ந்த காலத்தில் எருசலேமின் நிலையானது மிகவும் பரிதாபமாக இருந்தது. அசீரியர்களால் சூறையாடப்பட்ட எருசலேமும் யூதா நாடும் மீண்டும் பாபிலோனியர்களால் வெற்றி கொள்ளப்பட்டு சூறையாடப்பட்டது. இப்படிப்பட்ட சூழ்நிலையில்தான் தன் நாட்டையும் மக்களையும் அதிகமாக அன்பு செய்த அபக்கூக் தனது மனக்குறையை இறைவனிடம் எடுத்துரைப்பதும் அதற்கு இறைவன் தருகின்ற பதில் இன்றைய முதல் வாசகமாக அமைந்தது. நேர்மையானவர் வாழ்வர் என்ற நம்பிக்கையான வார்த்தை தரப்படுகின்றது.



**இரண்டாம் வாசக முன்னுரை**

கடவுள் மீது நாம் கொண்டிருக்கும் நம்பிக்கை, நம்முடைய சொந்த முயற்சிகளால் மட்டும் கிடைப்பது அல்ல. மாறாக கடவுளின் திருவுளமே என்கிறார் புனித பவுல் அடிகளார். ஆகவே நமது துன்பகரமான நேரங்களில் இறைவனது திருவுளத்தைத் தேடவும் அதன் வழியாக நம்பிக்கையான கிறிஸ்தவ வாழ்வைத் தொடர்ந்திட தேவையான இறையருள் வேண்டி இவ்வாசகத்திற்கு செவிமடுப்போம்.

**மன்றாட்டுக்கள்**

1. அன்பின் இறைவா, எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர், பொதுநிலையினர் அனைவரும் விசுவாசத்தில் உறுதிப்படவும், அவ்விசுவாசத்தை பிறரோடு பகிர்ந்துகொண்டு வாழவும் தேவையான இறையருள் வேண்டி இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2. அன்பின் இறைவா, நோய்களால், தோல்விகளால், கடன் தொல்லைகளால், குடும்பப் பிரச்சனைகளால் நம்பிக்கை இழந்து இருக்கின்ற மக்களுக்கு உமது வார்த்தை நம்பிக்கை தருகின்ற வார்த்தையாக அமையவும், துணிவோடு துன்பங்களை சந்திக்கின்ற வலிமையும் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. அன்பின் இறைவா, எங்களது கிறிஸ்தவ வாழ்வுப் பயணத்தில், நம்பிக்கையோடும், பொறுமையோடும் இருக்கவும், அதன் வழியாக இறை திருவுளத்தை அறிந்து மகிழ்ச்சியோடு எங்களது வாழ்வைத் தொடர்ந்திட துணைபுரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. அன்பின் இறைவா உடல் உள்ள நோய்களால் துன்பப்படுவோருக்கும், அகதிகளாக தங்களது தாய்நாட்டை விட்டு விரட்டி அடிக்கப்பட்டவர்களுக்கும், தங்களது சொந்தங்களால் புறக்கணிக்கப்பட்டவர்களுக்கும் நீரே ஆறுதலாக, நம்பிக்கையாக இருக்க வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2. அன்பின் இறைவா, பணக்காரர்கள், செல்வந்தர்கள், ஏழைகளின் பால் இரக்கம் கொண்டு தாங்கள் கொண்டிருக்கின்ற செல்வங்களை ஏழைகளோடும் வறியவர்களோடும் பகிர்ந்து வாழக் கூடிய தாராள மனத்தைத் தரவேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
3. அன்பின் இறைவா, நாங்கள் அனைவரும் உலக செல்வங்களுக்கு அடிமையாகாமல் இறை உறவிலும் மனித உறவிலும் வளர்ந்து நீதி, அன்பு, சாந்தம் விசுவாசம் , பக்தி என்னும் குணங்களில் வளர துணைபுரிய வேண்டுமென்று இறைவா, உம்மை மன்றாடுகின்றோம்.
4. அன்பின் இறைவா, நாங்கள் ஒவ்வொருவரும் எங்களது அனுதின வாழ்வில் ஒருவரை ஒருவர் மதிக்கவும் ஒருவரை ஒருவர் அன்பு செய்யவும் ஒருவருக்கு ஒருவர் உதவி செய்யவும், ஒருவர் மற்றவர் மீது அக்கறை கொண்டு வாழவும் துணைபுரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**பொதுக்காலம் 27 ஆம் ஞாயிறு**

**அப 1:2-3, 2:2-4 2தீமோ1:6-8, 13-14 லூக்17:5-10**

**முன்னுரை**

"நம்பிக்கையில்லாமல் எவரும் உண்மையான மானிட வாழ்க்கையை வாழ்ந்துவிட முடியாது'' என்கிறார் தத்துவவியல் அறிஞர் செய்மண்ட் மணிக்கர். "மனிதனுக்கு இருகைகளும் வெறுங்கை, நம்பிக்கைதான் வாழ்க்கை'' என்கிறார் கவிஞர் வைரமுத்து.

வாழ்விற்கு நம்பிக்கை எவ்வளவு அவசியமானது என்பதை மேற்கண்ட வார்த்தைகள் மிகத் தெளிவாக எடுத்துரைக்கின்றன. இன்பமான நேரங்களிலும், மகிழ்ச்சியான நேரங்களிலும் நமது நம்பிக்கை கரைபுரண்டோடும் என்பதில் சந்தேகமில்லை. ஆனால், துன்ப நேரங்களிலும், ஆபத்தான தருணங்களிலும் நமது நம்பிக்கை ஆட்டம் காண ஆரம்பிக்கின்றது. இதற்கு மாறாக துன்பங்களைக் கண்டு நாம் அஞ்சாமல் வாழ வேண்டும் என்று இன்றைய இறைவார்த்தை வழிபாடு நமக்கு அழைப்பு விடுக்கின்றது. மனம் தளர்ந்துவிடாமல் நம்பிக்கையோடு செயல்படுபவர்கள் எத்தகைய பலன்களை அனுபவிப்பார்கள் என்பதை இன்றைய வாசகங்கள் நமக்கு தெளிவுபடுத்துகின்றன. நம்பிக்கையோடு இருப்பவர்கள் அந்த துன்பங்களைத் தாங்குவதற்கான உள்ள உறுதியையும், இறைவனது பாதுகாப்பையும் பெறுகிறார்கள். வாழ்வில் வெற்றியையும் , பலனையும் பெற்றிட நமக்கு நம்பிக்கையும், பொறுமையும் அவசியம். எனவே வெந்ததைத் தின்று விதி வந்தால் சாவோம் என்ற மனப்பான்மையை விடுத்து, எனக்கு உறுதியூட்டும் இறைவனால் எதையும் செய்ய முடியும் என்ற மனநிலையோடு வாழ்ந்தோம் என்றால் எப்போதும் நம்மால் மகிழ்வுடன் வாழ முடியும். அத்தகைய உன்னதமான இறையருளை வேண்டி இத்திருப்பலியில் பங்குபெறுவோம்.





8) ஒருவரிடம் இருக்கும் நூறு ஆடுகளுள் ஒன்று வழி தவறி அலைந்தால் அவர் தொண்ணூற்றொன்பது ஆடுகளையும் மலைப்பகுதியில் விட்டுவிட்டு வழிதவறி ………… ஆட்டைத் தேடிச் செல்வார் அல்லவா?

10) உம் சீடர்களிடம் அவனைக் கொண்டுவந்தேன் அவனைக் குணமாக்க அவர்களால் ……….என்றார்.

11) நீங்கள் உங்களுக்கு எதிரே இருக்கும் ……….. செல்லுங்கள். சென்ற உடனே அங்கே கட்டிவைக்கப்பட்டிருக்கிற ஒரு கழுதையையும் அதனோடு ஒரு குட்டியையும் காண்பீர்கள். அவற்றை அவிழ்த்து என்னிடம் கொண்டு வாருங்கள்

12) அவருடைய போதனையைக் கேட்ட கூட்டத்தினர் ……….. ஆழ்ந்து போயினர்.

**மேலிருந்து கீழ்**

1) ஏரோது இறக்கும்வரை அங்கேயே இருந்தார். இவ்வாறு "எகிப்திலிருந்து என் மகனை ………… வந்தேன்'' என்று இறைவாக்கினர் வாயிலாக ஆண்டவர் உரைத்தது நிறைவேறியது.

2) இயேசு "இப்பொழுது விட்டுவிடும்…………. ஏற்புடையவை அனைத்தையும் நாம் நிறைவேற்றுவதுதான் முறை'' எனப் பதிலளித்தார். அதற்கு யோவானும் இணங்கினார்.

7) அவர் அவர்களுக்குக் கூறிய வேறு ஓர் உவமை பெண் ஒருவர் புளிப்புமாவை எடுத்து மூன்று மரக்கால் மாவில் பிசைந்து வைத்தார். மாவு ………… புளிப்பேறியது. விண்ணரசு இப்புளிப்புமாவுக்கு ஒப்பாகும்.

10) மாலையானதும் திராட்சைத் தோட்ட உரிமையாளர் தம் மேற்பார்வையாளரிடம் 'வேலையாள்களை அழைத்துக் கடைசியில் வந்தவர் தொடங்கி …………. வந்தவர்வரை அவர்களுக்குரிய கூலி கொடும்' என்றார்.

**கீழிருந்து மேல்**

3) மேலும் நீங்கள் நோன்பு …………….. வெளிவேடக்காரரைப் போல முகவாட்டமாய் இருக்க வேண்டாம்.

4) அவர்கள் "இறை மகனே …………. இங்கு என்ன வேலை? குறித்த காலம் வரும்முன்னே எங்களை வதைக்கவா இங்கே வந்தீர்?'' என்று கத்தினார்கள்.

5) இப்படி அவர்கள் உங்களை ஒப்புவிக்கும்பொழுது என்ன பேசுவது எப்படிப் பேசுவது என நீங்கள் கவலைப்பட வேண்டாம். நீங்கள் என்ன பேச வேண்டும் என்பது அந்நேரத்தில் உங்களுக்கு …………….

8) அவருடைய தலையை ஒரு தட்டில் வைத்துக் கொண்டுவரச் செய்து அதைச் சிறுமியிடம் கொடுத்தான். …………. அதைத் தன் தாயிடம் கொண்டு சென்றாள்.

9) இதை அறிந்த இயேசு "நம்பிக்கை குன்றியவர்களே …………. என்று உங்களிடையே ஏன் பேசிக் கொள்கிறீர்கள்?

**விடைகள் அனுப்ப இறுதி நாள் 25-09-2022**

**சென்ற மாதத்தின் விடைகள் 2 மக்கபேயர் விடைகள்**

**வ. இ.** **1.** 1:6 **2**. 5:6; **5.** 7:6; **7.** 12:20; **9.** 1:14; **10**. 3:16**; 13.** 8:3

**இ. வ.** **3.** 5:3; **4.** 6:28; **6.** 9:10; **8.** 13:14; **11.**4:5; **12.**7:5; 14. 9:5

**மே. கீ.** **2.** 3:12; **3.**4:21; **7.** 11:8; **8.** 14:2; 10.2:20

**கீ. மே.** **1.** 2:18; **4.** 7:23; **5.**8:5; **6.** 10:8; **9.**15:3; **11.** 5:26

# பார்புகழ் பாத்திமா அன்னை வரலாறு ④



கலைச்சுடர் முனைவர். ஜோ. விண்ணரசன், மேல்வழி

### தூதரின் இரண்டாம் மற்றும் மூன்றாம் காட்சி

தூதனவர் முதல் முறை வந்துசென்று மறைந்தபோதும்
தூயனதன் மாட்சி நெஞ்சில் மறையவில்லை
நாவுதனில் அசையும் செபம் ஓயவில்லை
நாழிகூட இருண்ட விதம் தெரியவில்லை
முன்புபோல கலகலப்பாய் பேசினது குறைந்தது
முழுநேர ஆழமைதி செபம்தான் தொடர்ந்தது
மூவரது முகப்பொலிவு மென்மேலும் சுடர்ந்தது
காண்போரது கண்கள் மிகவும் வியந்தது
வேறோருநாள் இரண்டாமுறை தூதர் வந்தார்
வேண்டிநின்ற மூவரையும் சூழ்ந்து கொண்டார்
தீமைமிகப் பெருகிவிட்ட அந்த பூமிக்காக
தியாகம்பல செய்யவேண்டி அழைப்பு தந்தார்
அன்னைமேரி அன்புநெஞ்சம் கலங்கி நிற்கும்
அவலநிலை அத்தனையும் விளக்கி நின்றார்
விரைவாக அன்னைமரி காட்சிதர இருப்பதனால்
தயாராக இருக்கும்படி பணிந்து சொன்னார்
மூன்றாம்முறை வரும்போது தூதனவர் தனதுகையில்
விலைமதிப்பில்லா நற்கருணையை சுமந்து வந்தார்
மானிடரின் பாவங்களால் இயேசுபிரான் செந்நீரும்
பாத்திரத்தில் பாய்வதையே காட்டி நின்றார்
பூமியரின் பாவங்களும் ஆளுவோரின் பாதகங்களும்
மூவுலகு நாதருக்கும் அவரைத்தந்த தாயாருக்கும்
அள்ளித்தந்த துரோகங்களோ அளவிட முடியாதவை
சொல்லிசொல்லி அழுதாலும் தாங்கிடவே முடியாதவை
நாள்தோறும் நற்கருணையை தவறாமல் சந்திக்கணும்
நாடுகள் முழுவதுமாய் தங்களையே நிந்திக்கணும்
செபமாலை சொல்வதுடன் உடல்வாதை அண்டிக்கணும்
சுருக்கமாய் சொல்லிவிட்டு விருட்டென மறைந்தார்
விளங்காத சிறுவருமே கலங்காமல் தென்பட்டனர்
துலங்காத எண்ணங்களால் புதிராக கண்பட்டனர்
தூதனவர் சொன்னதெல்லாம் உள்ளத்தில் சிந்தித்தனர்
தூதனவர் சொன்னதுபோல் அன்னைக்காக கண்வைத்தனர்







செய்யாமல் நாம் இருப்பதோடு நன்மைகள் செய்ய வேண்டும் என்கிறார் ஆண்டவர்.

தந்தையாம் கடவுளின் பார்வையில் தூய்மையானதும் மாசற்றதுமான சமய வாழ்வு எதுவெனில், துன்புறும் அனாதைகளையும் கைம்பெண்களையும் கவனித்தல் ஆகும் என்கிறார் புனித யாக்கோபு. எனவே, நம்மோடு வாழக்கூடிய மனிதர்களை ஜடமாக அல்ல, சராசரி மனிதர்களாக அல்ல, மாறாக கடவுளின் பிள்ளைகளாக நாம் அணுகி அவர்களை மதிக்கவும், அன்பு செய்யவும் முயல்வோம். அதன் வழியாக இறைவனது விண்ணக மகிமையில் பங்கு பெறுவோம். அதற்குத் தேவையான இறையருளை வேண்டி இத்திருப்பலியில் பங்கு பெறுவோம்.

**முதல் வாசக முன்னுரை**

இன்றைய முதல் வாசகம் இஸ்ரயேலைப்பற்றிய புலம்பலாக அமைகிறது. பணக்காரர்கள் மற்றும் பெருங்குடி மக்கள் தங்கள் நாட்டில் வாழ்ந்த ஏழை எளியவர்கள், வறியவர்கள் மட்டில் கொஞ்சமும் கவலைப்படவில்லை. அவர்கள் தங்களது வாழ்வைக் குறித்து மனம் வருந்தாவிடில் மீட்பு இல்லை என்று ஆமோஸ் இறைவாக்கினர் இறைவாக்கு உரைக்கிறார்.

**இரண்டாவது வாசக முன்னுரை**

கிறிஸ்தவர்கள் பிறருக்கு எடுத்துக்காட்டான வாழ்வு வாழ வேண்டும் என்று பவுல் அடிகளார் கூறுகின்றார். நம்மை பொறுத்தமட்டில் மனவுறுதி, பிறரைப் பொறுத்தமட்டில் நீதி, அன்பு, சாந்தம், இறைவனைப் பொறுத்தமட்டில் விசுவாசம், பக்தி என்ற முறையாலே நமது உறவுகள் நமது கிறிஸ்தவ வாழ்வின் வெளிப்பாடாக அமைய வேண்டும். இத்தகைய ஓர் உயர்ந்த அழைப்பு வாழ்வை வாழும்போது விண்ணக வாழ்வைப் பெறுவோம் என்று கூறும் பவுலின் அறிவுரைக்கு செவிமடுப்போம்.

**மன்றாட்டுக்கள்**

1. அன்பின் இறைவா, எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர், பொதுநிலையினர் அனைவரும் மனித நேயம் கொண்டவர்களாக வாழ்ந்து ஏழை எளியவர்கள் மீதும், வறியவர்கள் மீதும் அக்கறை கொண்டு வாழக் கூடிய உயரிய மனநிலையைத் தரவேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**இரண்டாம் வாசக முன்னுரை**

அனைவரும் இறைவனை அறிய வேண்டும், மீட்புப்பெற வேண்டும் என்பதே இறைவனின் விருப்பம். இறைவனைக் கண்டடைய அனைவர்க்கும் வாய்ப்பு அளிக்கப்படுகிறது. அவரது அழைப்பை ஏற்று அவரை விசுவசித்து மீட்புப்பெற புனித பவுல் அழைப்பு விடுக்கின்றார். எனவே மீட்புப்பெற அழைக்கப்பட்ட அனைவருக்காகவும் நாம் செபிக்க வேண்டும். நாமும் பவுலின் வழியில் நடந்து, அனைவருக்காகவும் செபிக்கவும் மீட்புத்திட்டத்தைப் பறைசாற்றவும் வரம் வேண்டி இவ்வாசகத்திற்கு செவிமடுப்போம்.

**மன்றாட்டுக்கள்**

1. அன்பின் இறைவா, எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர், பொதுநிலையினர் அனைவரும் விண்ணக வாழ்வுக்கு உரியவற்றில் முன்மதியோடு செயல்பட தேவையான இறைஞானத்தைத் தரவேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2. அன்பின் இறைவா, இவ்வுலகில் நாங்கள் சம்பாதித்த செல்வத்தை ஏழை எளியவர்களோடு பகிர்ந்து கொண்டு உமது நிலையான அருளையும் இரக்கத்தையும் பெற துணைபுரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. அன்பின் இறைவா, திருமுழுக்குப் பெற்றுள்ள நாங்கள் ஒவ்வொருவரும் எங்களது அனுதின வாழ்வில் மறுவாழ்வைப் பற்றியும், உலக மீட்பைப் பற்றியும் அக்கறையோடு செயல்பட தேவையான அருளைத் தரவேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. அன்பின் இறைவா, நாங்கள் ஒவ்வொரு நாளும் செபத்திலும் தவமுயற்சிகளிலும் ஈடுபட்டு உமது மீட்பையும் அன்பையும் நிறைவாகப் பெற எங்களுக்குத் துணைபுரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**பொதுக்காலம் 26 ஆம் ஞாயிறு**

**ஆமோ 6:1,4-7 1திமோ 6:11-18 லூக் 16:19-31**

**முன்னுரை**

இறை இயேசுவில் அன்பார்ந்தவர்களே நமது அனுதின வாழ்வில் சந்திக்கின்ற மனிதர்களை தூக்கி எறியக்கூடிய ஒரு பொருளாகவோ அல்லது சாதாரண மனிதர்களாகவோ அணுகாமல் கடவுளின் பிள்ளைகளாக அணுக இன்றைய வார்த்தை வழிபாடு நமக்கு அழைப்புவிடுக்கின்றது. இறைவனது அன்புக்கும் அவரது மீட்புக்கும் உரிய மக்களாக வாழ தீமை செய்யாமல் இருந்தால் மட்டும் போதாது. நன்மையும் செய்ய வேண்டும் என்கின்றது இன்றைய நற்செய்தி. நாம் இரண்டு விதங்களில் குற்றம் இழைக்கலாம். நாம் செய்ய வேண்டிய நற்செயலைச் செய்யாமல் விட்டாலும் குற்றம். நாம் செய்யக்கூடாத தீய செயலைச் செய்தாலும் குற்றமாகும். எனவே தீமைகள்





# ஞாயிறு திருவழிபாட்டுத் துணைவன்

அருள்பணி. ஆனந்த் லூர்துராஜ் ம.ஊ.ச,
அமலோற்பவ மாதா ஆலயம், பூம்பொழில்நகர்.



**பொதுக்காலம் 24 ஆம் ஞாயிறு**

**விப 32:7-11;13-14 1திமோ1:12-17 லூக் 15:1-32**


**முன்னுரை**

கடவுளின் தலையாய குணங்களில் ஒன்றான இரக்கத்தை முழுமையாகப் புரிந்துகொண்டு, நாமும் இரக்கம் உள்ளவர்களாக வாழ இன்றைய திருவழிபாடு அழைப்புவிடுக்கின்றது. நீதியின் அடிப்படையில் செயல்பட்ட இறைவன் இரக்கத்தின் அடிப்படையால் செயல்படுகிறார். மனிதரை அழிப்பதல்ல, மாறாக அவர்களை வாழவைப்பதே கடவுளுடைய திட்டமாக இருக்கிறது. இன்றைய வாசகங்கள் இறைவனது பரிவுள்ளத்தையும் , இரக்கத்தையும் பற்றியே பேசுகின்றது.

மனிதர்களாகிய நாம் நீதியின்படி தண்டனைக்குரியவர்களாயினும் இறைவன் தன்னுடைய அளவற்ற இரக்கத்தால் மன்னித்து விடுதலையளிக்கிறார் என்பதை இன்றைய இறைவார்த்தை வழிபாடு எடுத்துரைக்கிறது. கடவுளின் இரக்கம் அவரது பொறுமையை மட்டும் சுட்டிக்காட்டவில்லை மாறாக, அவரது வல்லமையையும் சுட்டிக்காட்டுகிறது. இரக்கப்படுவதும், மன்னிப்பதும் பலவீனத்தின் அடையாளம் அல்ல, மாறாக, பலத்தின் அடையாளம். உள்ளத்தில் வல்லமையும், ஆற்றலும் உடையவர்கள் மட்டுமே எல்லார்மீதும் இரக்கம் காட்ட முடியும். இதையே சாலமோனின் ஞான புத்தகம் இவ்வாறு கூறுகிறது. “நீர் எல்லாம் வல்லவராய் இருப்பதால் எல்லார்மீதும் இரங்குகிறீர்” எனவே கடவுளின் இரக்கம் அவரது வல்லமையின் வெளிப்பாடு, கடவுளின் இரக்கத்தை மோசே, பவுல், ஊதாரிமகன் ஆகியோரைப் பின்பற்றி, நாம் நமது வாழ்விலும் உய்த்துணர்வோம். நாமும் இரக்கமுள்ளவர்களாக மாறுவோம் அதற்கு தேவையான இறையருள் வேண்டி இத்திருப்பலியில் பங்கு பெறுவோம்.

**முதல் வாசக முன்னுரை**

இறைவனின் நீதியும், அவரது கருணையும் வெல்லும் என்பதற்கு இன்றைய முதல் வாசகம் சான்றுபகர்கிறது. இஸ்ரயேல் மக்கள் எவ்வளவு விசுவாசமற்றவர்களாக பிரமாணிக்கமற்றவர்களாக இருந்தாலும் இறைவன் அவர்களை இரக்கத்தோடு மன்னிக்கிறார் என்பதே இன்றைய முதல் வாசகம் விடுக்கும் செய்தி. அத்தகைய இறை



இரக்கத்தையும் இறை மன்னிப்பையும் வேண்டி இவ்வாசகத்திற்கு செவிமடுப்போம்.

**இரண்டாம் வாசக முன்னுரை**

புனித பவுல், கடவுள் எனக்கு இரங்கினார் என்பதையே மீண்டும் மீண்டும் கூறி , பாவிகளை மீட்க கடவுள் தயாராக இருப்பதை, தன் வாழ்கையை உதாரணமாகச் சுட்டிக்காட்டி உருக்கத்தோடு விளக்குகிறார். கடவுளின் இரக்கத்தால், நாம் அவரது நன்மைத்தனத்தையும், அருளையும் அன்பையும் நிலையாகப் பெறுகின்றோம் என்ற நம்பிக்கையோடு இவ்வாசகத்திற்கு செவிமடுப்போம்.

**மன்றாட்டுக்கள்**

1. அன்பின் இறைவா, எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர், பொதுநிலையினர் அனைவரும் பரிவுள்ளம், இரக்கம் நிறைந்த தலைவர்களாக வாழ வரம் வேண்டி உம்மை மன்றாடுகின்றோம்.

2. இரக்கத்தின் இறைவா, நீர் நீதியின் அடிப்படையில் அல்ல, மாறாக உமது இரக்கத்தின் அடிப்படையில் எங்களை வழிநடத்துகின்றீர் என்பதை உணர்ந்து, உம்மைத் தேடி உமது இரக்கத்திற்குரிய மக்களாக வாழ துணைபுரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. மன்னிப்பின் இறைவா, நாங்கள் ஊதாரிமகனைப்போல உமக்கு முன்பாக எங்களது பாவங்களையும், குற்றங்களையும் ஏற்று மனம் வருந்தி உமது மன்னிப்பை முழுமையாகப் பெற எங்களுக்கு துணைபுரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. அன்பின் இறைவா, உம்மை போன்று நாங்கள் எங்களுக்கு எதிராக தீமை செய்தவர்களை, நீதியின் அடிப்படையில் அல்ல, இரக்கத்தின் அடிப்படையில் மன்னித்து அவர்களுக்கு நன்மை செய்யக்கூடிய அருளைத் தரவேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**பொதுக்காலம் 25 ஆம் ஞாயிறு**

**ஆமோ 8:4-7 1திமோ 2:1-8 லூக் 16:1-13**

**முன்னுரை**

நாம் பாதுகாப்போடும், மகிழ்ச்சியோடும் பயணம் செய்ய திருஅவை அவ்வப்போது சில எச்சரிக்கைகளை விடுக்கிறது. அவற்றில் ஒன்று, செல்வத்தின் மட்டில் நாம் கவனமாய் இருப்பதற்கான





எச்சரிக்கை. நாம் வாழும் உலகமானது செல்வத்தின் மீதும், பணத்தின் மீதும் அதிக நம்பிக்கை வைக்கும் உலகம். பணத்தால் செய்ய முடியாதது எதுவும் இல்லை என்று சொல்லி பணக் குவிப்பில் மக்களை ஈடுபடச் செய்யும் உலகம். எனவே, செல்வத்தையும், பணத்தையும் குவிப்பதுதான் இன்று மனிதன் தனது வாழ்வின் நோக்கமாகக் கொண்டுள்ளான். மனிதர்களைப் பயன்படுத்தி, செல்வத்தைச் சம்பாதி என்ற வாழ்க்கைத் தத்துவத்தைக் கொண்டு வாழ முயல்கிறது இன்றைய உலகம். இத்தகைய தவறான தத்துவத்திற்கு மாறான மனித நேயம் நிறைந்த தத்துவம் ஒன்றை இயேசு இன்றைய நற்செய்தியில் முன்வைக்கிறார். உலக செல்வத்தைப் பயன்படுத்தி மனிதர்களைச் சம்பாதி என்பதே அந்தத் தத்துவம். பொருளை விட மனிதம் பல மடங்கு மேலானது என்கின்றன இன்றைய வாசகங்கள். அதாவது , நமது செல்வத்தைக் கொண்டு ஏழைகளுக்கு இம்மையில் உதவி செய்தல், மறுமையில் அவர்கள் நிமித்தம் கடவுள் நமக்கு நிலைவாழ்வு தருவார் என்பதை இறைவன் நமக்குத் தரும் செய்தி. செல்வத்தை நேர்மையான செல்வமாக மாற்றுவதற்கு ஒரே வழி அதைக்கொண்டு ஏழை எளியவர்களுக்கு உதவி செய்தல் ஆகும். எனவே உலக செல்வத்தைப் பயன்படுத்தி நண்பர்களைச் சம்பாதித்த வீட்டுப் பொறுப்பாளனின் மனநிலையைப் போல நமது மனநிலையும் மாற இன்றைய திருப்பலியில் மன்றாடுவோம்.

**முதல் வாசக முன்னுரை**

உலக செல்வத்தை நேர்மையற்ற செல்வம் என்று கிறிஸ்து குறிப்பிடுவது ஏன்? ஏனெனில் பெரும்பாலும் மக்கள் நேர்மையற்ற வழியில் செல்வம் சேர்க்கின்றனர். இறைவாக்கினர் ஆமோஸ் அவருடைய காலத்தில் நிலவிய சமூக அநீதிகளைப் பற்றியும், இவ்வாறு முறைகேடான வழிகளில் செல்வங்களை திரட்டினர் என்பதைப் பற்றியும் சாடுகின்றார். இது இறைவனுக்கு பிடிக்காத செயல் என்றும் கூறுகின்றார். நாமும் மனிதர்களைப் பயன்படுத்தி செல்வத்தை சம்பாதிக்கும்போது அது இறைவனை சினம் கொள்ளச் செய்கிறது. எனவே நேரிய வழியல் செல்வத்தைத் தேடும் இறைஞானம் வேண்டி இவ்வாசகத்திற்கு செவிமடுப்போம்.

